# இறையியல் கோலங்கள்

வடிவம் 15 ஜீன், செப்ரெம்பர் 2002 வண்ணம் 02, 03

நீதி ஒப்புரவு



அமைதி

# இறையியல் கோலங்கள்

காலாண்டு வெளியீடு

# *Irai Iyal Kolangal*

*Tamil Theological Quarterly*

**Vol : 15**

**No: 02, 03**

**June, September - 2002**

**வடிவம் : 15**

**வண்ணம் : 02, 03**

**ஜூன், செப்ரெம்பர் - 2002**

**புனித சவேரியார் குருத்துவக் கல்லூரி,**

**கொழும்புத்துறை, யாழ்ப்பாணம்,**

**இலங்கை.**

**ஆசிரியர் :**

அருள்திரு ஜே. நிக்கிலஸ்

**துணை ஆசிரியர்கள் :**

அருள்திரு ச.வி.ப. மங்களராஜா

அருள்திரு ப.ஜோ. ஜெபரட்ணம்

**நிர்வாகக் குழு :**

சகோ. அ.பீ. திருமகன்

சகோ. தே. செல்வரட்ணம்

சகோ. தா. நிருபன் நிஷானந்

சகோ. அ. அன்ரன் ஸ்ரீபன்

சகோ. பா. ஜோ. அன்ரனி பிறாயன்

சகோ. சூ. டக்ளஸ் மில்ரன் லோகு

**வெளியீடு :**

புனித சவேரியார் குருத்துவக் கல்லூரி,

கொழும்புத்துறை, யாழ்ப்பாணம், இலங்கை.

***Editor :***

Fr.J. Nicholas

***Sub Editors :***

Fr.S.V.B. Mangalarajah

FrP.J. Jebaratnam

***Administrative Board:***

Bro.A.P. Thirumahan

Bro.T. Selvaratnam

Bro.T. Niruban Nishanand

Bro.A.Anton Stephen

Bro.B.J. Antony Brian

Bro.S. Douglas Milton Logu

***Publication:***

St.Francis Xavier's Seminary,

Columbuthurai, Jaffna, Sri Lanka.

Tel.No: 021-2482

# பொருளடக்கம்


பக்கம்

1. ஆசிரியரிடமிருந்து 01

2. இனங்களுக்கிடையிலான புரிந்துணர்வும் ஒப்புரவும் சமாதானத்திற்கு அடித்தளமிடும் 02
   - அருள்திரு அருட்செல்வன் -

3. உறைபனியிலும் வெண்மையாக உ ஒப்புரவு 05
   - அருட் சகோ. சூடக்ளஸ் மில்ரன் லோகு -

4. நீதி, அமைதி, அபிவிருத்திக்காக உழைத்தல் நற்செய்திப்பரப்புரையின் ஒருங்கமைந்த செயற்பாடுகளாகும் 10
   - அருட் சகோ. அ. குசைநாதன் -

5. சமாதானத்தை நோக்கிய அரசியல் மாற்றங்களில் ஒப்புரவின் முக்கியத்துவம் 14
   - செல்வி ம. பத்மா -

6. நீதி ஒப்புரவு சமாதானத்திற்கான பாதையில் இளைஞர்களின் பங்கு 19
   - திரு ம. யேசுதாசன் -

7. அருட்தந்தை ஜெயக்குமாருடன் நேர்காணல் 24
   - பேட்டி கண்டவர்: அருட் சகோ. அ.பீ. திருமகன் -


8. உளரீதியாக இடம்பெறும் ஒப்புரவு சமாதானத்திற்கு வழிகோலும் 29
   - அருட்சகோதரி. கிறிஸ்ரோபெல் -

9. புனித பசில் 32
   - அருட் சகோ. விமல் (அமதி) -

10. **Synopsis** 35

11. குறுக்கெழுத்துப் போட்டி 41

# ஆசிரியர் கருத்து...



அழகிய எம் தாய்நாடு கடந்த இரண்டு தசாப்தங்களாகப் போரினாலும் அதன் விளைவாக ஏற்பட்ட இழப்புக்களாலும் அவலங்களாலும் பொலிவிழந்து நலிந்துள்ளது. தமிழ்ப் போராளிகளும் அரசும் சமாதானப் பாதைக்குத் திரும்பி அதற்குரிய முன்னெடுப்புகளைக் கடந்த சில மாதங்களாகச் செய்து வருகின்றனர்.

ஆரம்பத்தில் நம்பிக்கையுடனும் வேகத்துடனும் புறப்பட்ட இச்சமாதானப் பயணம் போகப்போகப் பல தடைகளால் திக்குமுக்காடுகின்றது போலத் தெரிகின்றது. எனினும் சமாதானத்தை விரும்பும் பெருந்தொகையான மக்களின் குரல் இன்னும் ஓங்கி ஒலித்துக் கொண்டிருப்பது நம்பிக்கை தருகின்றது.

உண்மையான சமாதானம் உடன்படிக்கைகளாலும், சட்டங்களாலும், தடைகளாலும், தடைநீக்கங்களாலும் ஏற்படுவதொன்று அல்ல. அது ஒவ்வொருவரது உள்ளத்திலும் ஊற்றெடுத்துப் பாய வேண்டும். இதற்கு எல்லா மக்களிடையேயும் புரிந்துணர்வு, ஒருவர் ஒருவரது தனித்துவத்தை மதித்து ஏற்றல், ஒப்புரவையும் நட்புறவையும் ஏற்படுத்துதல், நீதியை நிலைநாட்டல், பல்வேறு வளங்களையும் பகிர்ந்து அபிவிருத்திக்காக உழைத்தல் ஆகியவை தேவை.

இவ்விதழில் விரியும் ஆக்கங்கள் பல்வேறு கோணங்களில் நிலையான சமாதானம் ஏற்படுவதற்கான வழிவகைகளை ஆராய்கின்றன. இவை நாம்/நான் எவ்வாறு உண்மைச் சமாதானத்திற்கு எமது/எனது பங்களிப்பை வழங்கமுடியும்.. அதன் விளைவாக இலங்கையை மீண்டும் அழகிய ஒரு நாடாக மனித மாண்பும் நீதியும் மற்றும் பல்வேறு உயர் விழுமியங்களும் மதிக்கப்படும் ஒரு சமூகமாக உருவாக்கமுடியும் என்ற சிந்தனையைத் தூண்ட வேண்டும். ஒப்புரவின் வழி சமாதானத்தைக் கொணரும் இறைவன் உங்களை ஆசீர்வாதிப்பாராக.

ச.வி.ப. மங்களராஜா

# இனங்களுக்கிடையிலான புரிந்துணர்வும் ஒப்புரவும் சமாதானத்திற்கு அடித்தளமிடும்

என்றுமில்லாதவாறு ஓர் சமாதான உடன்பாட்டின் நீரோட்ட நகர்வு எம்நாட்டின் புறச்சூழலில் ஒரு புதுப்பரிணாமம் பெற்றுள்ளது. இனங்கள் தன்னியல்பிலேயே தனித்துவம் பெற்றவை. வரலாற்றுப் பாரம்பரியங்கள் உள்வாங்கப் பெற்றவை. தமக்கே உரிய இலக்கியங்கள், பண்பாடுகள், மொழியியல், கலை போன்ற வளங்களால் வடிவமைக்கப்பட்டவை. இவையென்றும் சுத்தமான கலப்பற்ற தங்கங் களல்லவே. ஏதோ ஒரு வகையில் பிற பண்பாட்டு பாரம்பரியங்களின் தழுவல்களும், இறக்குமதிகளும் இங்கே தவிர்க்கமுடியாதவை. இருந்தும் ஒவ்வொரு இனத்திற்கும் அவற்றிற்கென தனித்துவமுண்டு.

இந்த இனங்கள் விரும்பியோ விரும்பாமலோ ஒன்றோடொன்று சேர்ந்து வாழும், பல்லின தேசத்தின் அந்த இருப்பு என்பது, யதார்த்தமே. அதுபோல அவர்களிடையேயான பிணக்குகளும், பூசல்களும், வேறுபாட்டு விரிசல்களின் பரப்புக்களும் நாளுக்கு நாள் நீண்டு செல்வது மறுக்கமுடியாத நிஜம். பேரினவாதிகளின் வல்லாதிக்க முன்னெடுப்புக்களும், தன்னாதிக்க விருப்புக் கொள்கைகளும், முதலாளித்துவப்பாணியில் அமைந்த அதிகாரப் பிரயோகங்களும், அவற்றிற்கு எதிரான, இனத்தின் சுய இருப்பு இனங்காணல், மற்றும் விடுதலைப் போராட்டங்களும் இந்த விரிசல்களுக்கு மென்மேலும் வித்திடுகின்றன.

வரலாற்றுப் புரட்டலில் இதற்குச் சான்றுகள் உண்டு. அமெரிக்கா - வியட்னாம், இந்தியா - பாகிஸ்தான், கிழக்குத் தீமோர் - இந்தோனேஷியா, ஏன் தமிழ் - சிங்கள போராட்டங்கள் இதற்குச் சிறந்த எடுத்துக் காட்டு. முதிர்ச்சி பெற்ற, வளர்ச்சியடைந்த ஓர் இனம், ஓர் இனத்தில் தங்கி கையேந்துவதையோ, அடிமைச் சாசனங்களில் கையெழுத்திடுவதையோ, தமது தலைவிதியை வேறு ஒருவர் தீர்மானிப்பதையோ ஜீரணிக்கமுடியாது. அதனால் குருதியால் கறைப்பட்ட போராட்டங்கள் வரலாற்றில் வெடித்தன. பல்லுயிர்களைக் காவு கொண்ட யுத்த நிலங்கள் மரணப் பேழைகளை மண்ணோடு சுமந்து நிற்கின்றன. ஓர் இனத்தின் பண்பாட்டு சிதைவு என்பது, அவ்வினத்தின் ஒட்டு மொத்தமான அழிவு ஆகும். தமது இனத்தின்

ஆளுகையை உறுதிப்படுத்த ஏனைய இனத்தவரை அடிமைப்படுத்துவது, மூளைச்சலவை செய்வது, பண்பாடு, கலை அம்சங்களை எல்லாம் சீரழிப்பது, எல்லாம் வரலாற்றுப் பக்கங்களில் அரங்கேறிய நிகழ்வு. ஆனால் உலக மனச்சாட்சிக்கு தப்பித்துக்கொள்ள, சமாதான சாயம் பூசப்படுகிறது.

" சமாதானத்திற்கான போர்" என்று முன்னைய அரசு யுத்தம் ஒன்றைப் பிரகடனம் செய்தது. இந்த சொற்பாவனையே ஒன்றை ஒன்று நிராகரிப்பவையாக அமைகிறது. (Contradiction in terms) அமெரிக்காவின் 'பயங்கரவாதத்திற்கெதிரான போர்' பிரகடனம் ஆப்கானிஸ்தானிலும், பிலிப்பைன்சிலும் மேலும் பயங்கரவாதிகளை உருவாக்கினதும், பல கோடி சொத்துக்கள், உயிர்கள், இராணுவ கலங்கள் அபகரிக்கப்பட்டதும், உலகத்தின் வெறுப்பை, பகைமையை சம்பாதித்ததும் தவிர சொல்லப்பட்ட சமாதானம் சாத்தியமாகவில்லை.

1956 களுக்கு முன் இலங்கையில் சிங்களம், தமிழ், முஸ்லீம், பறங்கி என பல்லின மொழி, மத கலாச்சார அடையாளங்களோடு மக்கள் ஒற்றுமையாக வாழ்ந்து வந்தது உண்மை. வேறுபாடுகள், வேற்றுமைக்கு மத்தியில் முறையான விட்டுக்கொடுப்புக்கள், நீதியான அதிகார பகிர்வுகள், சம உரிமை வழங்கல் இவற்றின் காரணமாகவே ஒரு சமாதான புறச்சூழல் சாத்தியமாக இருந்தது. இதற்கு ஆரோக்கியமான புரிந்துணர்வு முக்கிய பங்கு வகித்தது.

கால ஓட்டத்தில் ஆதிக்க இன வெறியும், கதிரைகளுக்கான பதவி ஆசைகளும், பாதுகாப்பற்ற உணர்வுப்பிரச்சினைகளும், (Problem of Insecurity) தலைதூக்க புரிந்துணர்வு அற்றுப்போனது. இலங்கையில் மட்டுமல்ல, சர்வதேச மட்டத்திலும், முரண்பட்டு நிற்கும் இனங்களை ஒன்றுபடுத்தி சமாதானம் ஒன்றை ஏற்படுத்திவிட வேண்டும் என்ற முயற்சிகள், பல மட்டங்களிலும் முடுக்கிவிடப்பட்டன. இதற்காக என்ன விலையும் கொடுக்க தயாராக உள்ளது இன்றைய உலகம். என்னதான் இருந்தாலும் புரிந்துணர்வு இல்லாத சமாதானத்துக்கான எந்தவொரு முயற்சியும் மணமக்கள் இல்லாத திருமணமே.

வரட்டு கௌரவம், சுயலாபம், எதேச்சையான அதிகாரம் காரணமாக ஓர் இனம் மற்றைய இனத்துக்கு கொடுக்க வேண்டிய அடிப்படை உரிமைகளைத்தட்டிக்கழிப்பதை விடுத்து, மனித நேய அடிப்படையில், விட்டுக்கொடுப்புக்களோடும், புரிந்துணர்வுகளோடும் மட்டுமே சமாதானத்தை ஏற்படுத்த முடியும். மறுபுறத்தில் அநீதி இழைக்கப்பட்ட வடுக்கள் ஆறாத இனங்களுக்கிடையே புரிந்துணர்வு

என்பது கடினமான ஒன்று. இங்கேதான் ஒப்புரவு அவசியமாகின்றது. நடந்தவை நடந்தவையாக இருக்க, பேரழிவுகளையும், இன விரிசல்களையும் தவிர்த்துக் கொள்ள, பழிக்குப்பழி உணர்வு வரம்பைக் கடந்து ஓர் தீர்வு முயற்சிப்பு அவசியம்.

வெறுமனே கலைகளிலும், சர்வமதச் சடங்குகளிலும், சமாதானத்திற்கான யாத்திரைகளிலும் இந்த புரிந்துணர்வைப் பிரசவித்துவிட முடியாது. மறுக்கப்பட்ட உரிமைகள் மீள் பரிசோதனைக்குட்படுத்தப்பட்டு, நியாயமான, தீர்வுகளின் அடிப்படையில் மட்டுமே சமாதான முனைப்புக்கள் கனிகொடுக்கும்.

முடிவாக:
இன்று உலகம் களைத்துவிட்டது. தவறான ஓர் திசையில் சரியான இலக்கொன்றைத் தேடி, அந்த இலக்கிற்கு சரியான திசை ஒப்புரவும் சமாதானமுமே என்பதை இந்த பூமி காலம் கடந்து புரிந்து கொள்கிறது. இதை இடித்து உரைத்துக் கொண்டிருக்கிறது.

இனி
கிழிக்கப்படுபவை எல்லாம்
போர்க்கொடிகளாக இருக்கட்டும்
அழிக்கப்படுபவை எங்கே என்றாலும்
யுத்தத்தின் சுவடுகளாகட்டும்
சமாதான மேகம்
புரிந்துணர்வு, ஒப்புரவு
இவற்றில்
கருக்கொள்ளட்டும்.

அருள்திரு அருட்செல்வன்

**'எல்லா மக்களதும் குறிப்பாக சமுதாயத்தில் பலவீனமானவர்களுடைய உரிமைகள் மதிக்கப்படாதபோது சமாதானம் ஏற்படமுடியாது. எல்லா நாடுகளுக்கும் சமத்துவம், எல்லா மக்களுக்கும் சுயநிர்ணய உரிமை மற்றும் மனித சமுதாயத்தின் மேம்பட்ட நலனுக்காக உழைக்க சுதந்திரம் என்பவற்றின் மீது தான் சர்வதேச சட்டம் எனும் கட்டிடம் முழுவதும் கட்டியெழுப்பப்பட்டுள்ளது. (திருத்தந்தை 2ம் அருளப்பர் சின்னப்பர் இரண்டாம் உலக யுத்தம் வெடித்ததன் 50வது ஆண்டை நினைவு கூர எழுதிய அப்போஸ்தலிக்க மடல், இல.8 27.08.1989)**

# இறைபனியிலும் வெண்மையாக – ஒப்புரவு

**முன்னுரை:**

ஒப்புரவில் ஒன்றித்து ஒற்றுமையான மனநிலைகளை வாழ்க்கை முறைகளை சமுதாயத்திலே, இனங்களிடையே, மதங்களிடையே, நாடுகளிடையே நடைமுறைப்படுத்த மனிதகுலம் முன்வரவேண்டுமென்ற சுலோகம் ஆன்மீகவாதிகளாலும் அறிவு ஜீவிகளாலும் அண்மைக் காலங்களிலே எழுப்பப்பட்டுக் கொண்டிருக்கிறது. இந்த வேளையிலே கிறிஸ்தவர்களாகிய நாமும் ஆன்மீக ரீதியில் ஒப்புரவையும் ஒப்புரவு அருட்சாதனத்தைப்பற்றியும் சிந்தித்து சிறப்படைவது தகுமென கருதுகிறேன்.

**ஒப்புரவு என்றால்..........**

இறைவனின் அழைப்பிற்கு விசுவாசத்துடனான பதிலையும் தொடர்ந்து செல்லும் மனமாற்றத்திற்கான பதிலுரையையும் சுட்டி நிற்கும் ஒரு விவிலியப் பதமாக ஒப்புரவு இறைவனால் வழங்கப்படும் மீட்புக்கான ஒரு கொடையாகும். சாதாரண நடைமுறையில் ஒப்புரவு என்பது, ஒரு நீதிபதி முன் ஒரு குற்றவாளி தன் தவறை, குற்றத்தை ஏற்றுக்கொள்ளும் ஒரு வார்த்தைப் பிரயோகமாக அமைகிறது. ஆனால் கிறிஸ்தவ நெறியின்படி, ஒப்புரவு உள்ளார்ந்த மாற்றத்தை குறித்து நிற்கும் சொல்லாக அமைகின்றது. பரஸ்பர ஒப்புரவும் மன்னிப்பும் கிறிஸ்தவ வாழ்வின் அடிப்படை அம்சமாக அமைய வேண்டும். ஒப்புரவும் மன்னிப்புமே இறை புகழ்ச்சிக்கான அடித்தளத்தை அமைக்கின்றன.

“ஆகையால் நீங்கள் உங்கள் காணிக்கையைப் பலிப்பீடத்தில் செலுத்த வரும்போது உங்கள் சகோதர சகோதரிகள் எவருக்கும் உங்கள் மேல் ஏதோ மனத்தாங்கல் உண்டென அங்கே நினைவுற்றால், அங்கேயே பலிப்பீடத்தின் முன் உங்கள் காணிக்கையை வைத்துவிட்டுப்போய் முதலில் அவரிடம் நல்லுறவு ஏற்படுத்திக் கொள்ளுங்கள். பின்பு வந்து உங்கள் காணிக்கையைச் செலுத்துங்கள்.” (மத்.5:23-24)

“ஆகவே ஒருவருக்கொருவர் பாவங்களை அறிக்கை செய்து கொள்ளுங்கள். ஒருவர் மற்றவருக்காக இறைவனிடம் வேண்டுங்கள்.........” (யாக்கோபு 5:16)

இறைவனின் ஒப்புரவு அருளாலும் குணமாக்கும் அருளாலும் ஆட்கொள்ளப்பட்ட எம்மையே மாற்றிக் கொள்வதில்தான் இறைவனைப் புகழ்வதும் வணங்குவதும் தங்கியுள்ளன. இந்த மனமாற்ற அனுபவம் கிறீஸ்தவர்களாகிய எமது வாழ்வில் விசுவாசம் நிறைந்த மாற்றத்தைக் கொணர்கின்றது. இன்றைய நவீன உலகில் நாம், எமது நாளாந்த, தனிப்பட்ட, சமூக வாழ்விலே கிறீஸ்தவ மதிப்பீடுகளுக்குச் சான்று பகர அழைக்கப்படுகிறோம். பரஸ்பர மன்னிப்பையும் அமைதியையும் கொண்டிராமல் கிறிஸ்துவுக்கு சான்று பகர இயலாது. இந்த பரஸ்பர மன்னிப்பையும் அமைதியையும் ஆறுதலையும் கொணர்வது ஒப்புரவு என்றால் அது மிகையாகாது.

**ஒப்புரவு அருட்சாதனம் பற்றி கொஞ்சம்.........**

வரலாற்றின் ஒவ்வொரு காலகட்டத்திலும் இறையியல் விளக்கப்படியும் மேய்ப்புப்பணி நடைமுறைப்படியும் ஒப்புரவு என்பது வழக்கமாக புகுமுக அருட்சாதனமாகவே பிரதிபலிக்கின்றது. "ஒப்புரவு அருட்சாதனம் மூலமாக பாவிகள் கடவுளோடும் திருச்சபையோடும் சமரசமாக்கப்படுகிறார்கள்." (-குருக்களின் பணியும் வாழ்வும்-) (P.O.5) என்று இரண்டாம் வத்திக்கான் சங்க ஏடு குறிப்பிடுகின்றது. கிறிஸ்து தனது பாடுகள், மரணம், உயிர்ப்பு மூலமாக ஒப்புரவைக் கொணர்ந்தார். பாவத்தை வெறுக்கும் கடவுள் பாவியை ஏற்றுக்கொள்கின்றார். பாவத்தை விலக்கி பரிசுத்தமாக்கும் அருங்கொடையை அடைய ஒப்புரவு அருட்சாதனம் உதவுகின்றது. திருமுழுக்கு அருட்சாதனம் பாவத்திலிருந்து விதிவிலக்களிக்கின்றது. அதே செயற்பாட்டை ஒப்புரவு அருட்சாதனமும் ஆற்றுவதால் இது இரண்டாவது திருமுழுக்கு என்றவாறு கணிக்கப்படுகின்றது. மனம் வருந்தும் பாவிகளை தம் அரவணைப்பிற்குள் வரவேற்கும் இறைவனின் மன்னிப்பிற்கு இட்டுச்செல்வது ஒப்புரவு அருட்சாதனம்.

ஒப்புரவு அருட்சாதனம் பெறவருவோர் சிலவேளைகளில் இவ் அருட்சாதனம் பற்றிய ஒரு தெளிவான கருத்தில்லாமல் இருப்பதைக் காணக்கூடியதாயிருக்கின்றது. சிலர் தங்கள் உள்ளக்கிடக்கைகள் காது கொடுத்து கேட்கப்பட வேண்டும் என்ற மனப்பாங்கு கொண்டு வருகின்றனர். இன்னும் சிலர் தம்மை வேதனைப்படுத்தும் குற்றப் பழியுணர்விலிருந்து விடுபட வேண்டுமென்ற உளவியல் உந்துதல் காரணமாக வருகின்றனர். மேலும் சிலர் அடிக்கடி அருட்சாதனம் பெறும் பழக்கம், வழக்கம் காரணமாக வருகின்றனர். இவை அனைத்தும் பிழை என்று சொல்வதற்கில்லை. ஆனால் ஒப்புரவு அருட்சாதனம் தன்னகத்தே கொண்டிருக்கும் இறைவனின் மன்னிப்பளிக்கும், தூய்மைப்படுத்தும் அருட்கொடைகளை பெற்று அனுபவிக்கும் மனநிலையை தாங்கியவராக ஒப்புரவு அருட்சாதனத்தைப் பெறவருவதே சாலச் சிறந்ததாக அமையும்.

**நற்செய்தியில் இரக்கம் நிறைந்த தெய்வம்**

இயேசுவின் வாழ்விலே ஒப்புரவின், மனமாற்றத்தின், மன்னிப்பின் வெளிப்பாடுகள் பல புதுமைகள், உவமைகள், சம்பவங்கள் ஊடாக கோடிட்டு காட்டப்படுகின்றன. ஊதாரி மைந்தனும் மன்னிக்கும் தந்தைக்குமிடையிலான உணர்வு பூர்வமான சந்திப்பு (லூக்15:11-32) இழந்துபோன ஆட்டினை தேடிக் கண்டடைந்து தோளிலே சுமந்து ஆனந்தமடையும் ஆயன் (லூக்15:4-7); இயேசுவுக்கும் சக்கேயுக்குமிடையிலான சந்திப்பு (லூக்19:1-10); விபச்சாரத்தில் பிடிபட்ட பெண்ணுடனான இயேசுவின் சந்திப்பு (யோா8:1-11); நறுமணத் தைலத்தால் பாதம் கழுவி, முத்தமிட்ட பெண்ணுடனான இயேசுவின் சந்திப்பு (லூக்7:36-50); கல்வாரியில் கழுமரத்தில் தொங்கிய வேளையில் வலதுபுற கள்வனுடனான இயேசுவின் சந்திப்பு (லூக்23:39-43) போன்ற பல்வேறு உவமைகள், நிகழ்வுகள் வேதாகமத்தில் காணப்படுகின்றன. இவை அனைத்தும் ஒப்புரவின், மன்னிப்பின் மகத்துவத்தை வெளிக்காட்டி நிற்கின்றன. இவற்றில் காணாமற்போன மகன் உவமையும், இயேசுவும் சக்கேயுவும் நிகழ்வையும் ஒப்புரவு பற்றிய சிந்தனைகளுக்கு எடுத்துக் கொள்ள விரும்புகிறேன்.

**அ. காணாமற்போன மகன்**

காணாமற்போன மகனின் ஒப்புரவுத் தன்மையை மூன்றாக வகைப்படுத்தி சிந்திக்கலாம்.

1. தன்னுடனான ஒப்புரவு
2. தன் சொந்த தந்தையுடனான ஒப்புரவு
3. வானகத் தந்தையுடனான (இறைவனுடனான) ஒப்புரவு

ஊதாரி மைந்தன் உலக இச்சைகளுக்கு அடிமையாகி தன் சொந்தம் சொத்து அனைத்தையும் இழந்து துன்பங்களை அனுபவித்தவேளை தனக்குள்ளே ஓர் ஆழமான பயணத்தை மேற்கொள்கிறான். “என் தந்தையின் கூலியாட்களுக்குத் தேவைக்கு மிகுதியான உணவு இருக்க, நான் இங்கு பசியால் சாகிறேனே!” (லூக்15:17) என்ற எண்ண ஓட்டம், அவன் தன் உள்ளத்தில் கொண்ட ஒப்புரவின் வெளிப்பாடாகும். இவ்வாறு தன்னகத்தே ஏற்படுத்திய ஒப்புரவு அவனை தன் தந்தையின் இல்லத்தை நாடிச் செல்ல உந்துகின்றது. தந்தையின் அரவணைப்பில் அந்த மகன், “அப்பா........ உமக்கும் எதிராக நான் பாவம் செய்தேன்” (லூக்15:21) என்று தன் தந்தையுடன் குடும்பத்தில் ஒப்புரவாகிறான். அதேபோல், “கடவுளுக்கும்......எதிராக நான் பாவம் செய்தேன்” (லூக்15:21) என்று வானகத் தந்தையுடன்

ஒப்புரவாகிறான். இந்த முழுமையான ஒப்புரவின் மூலமாக புதுவாழ்வை சுவீகரித்துக் கொள்கிறான்.

இத்தகைய மனநிலையுடனேயே ஒப்புரவு அருட்சாதனத்தில் ஒன்றிக்க கிறிஸ்தவர்கள் அழைக்கப்படுகின்றனர். ஒவ்வொரு விசுவாசியும் தன்னுடனும் பிறருடனும், இறைவனுடனும் கொள்ளும் ஒப்புரவே முழுமையான ஒப்புரவாக அமைவதோடு உள்ளார்ந்த மாற்றத்திற்கும் புதுவாழ்விற்கும் இட்டுச் செல்லும்.

**ஆ. இயேசுவும் சக்கேயுவும்**

பாவி மனமாற்றத்தை நோக்கிய தன்னிச்சையான பயணத்திலே இறைவனின் இரக்கத்தைப் பெற்றுக் கொள்கிறான் என்று நாம் நினைக்கக்கூடாது. மாறாக இறை இரக்கமே ஒரு பாவியை மனமாற்றப் பாதையில் இழுத்துச் செல்கின்றது. மனிதனுடைய இறைவனை நோக்கிய பயணத்திற்கு முன்னதாக அவனின் உள்ளத்திலே இறைவனின் உட்புகல் இடம்பெறுகின்றது. இந்த இறை ஆட்கொள்ளலே மனமாற்றமாக அமைகின்றது.

இத்தகைய இறை ஆட்கொள்ளலே சக்கேயுவின் வாழ்விலும் இடம்பெற்றது. "இன்று உமது வீட்டில் நான் தங்க வேண்டும்." (லூக்19:5) என்று இயேசு தன்னை சக்கேயுவுக்கு தாராளமாக்கினார். இந்த இறை ஆட்கொள்ளல் சக்கேயுவின் உள்ளத்தில், வாழ்வில், செயலில் பாரிய மாற்றத்தைக் கொண்டு வந்தது. உடனே சக்கேயு விரைந்து இறங்கி வந்து மகிழ்ச்சியோடு அவரை வரவேற்றான். (காண்.லூக்19:6). இவ்வாறான ஒரு மகிழ்ச்சியையே ஒப்புரவு அருட்சாதனம் மூலமாக ஒவ்வொரு ஆன்மாவும் அனுபவிக்க வேண்டும்.

ஒப்புரவின் மூலம் ஏற்படும் மனமாற்றம் எம்மை செயற்பாட்டிற்கு இட்டுச் செல்லவேண்டும். சக்கேயு இயேசுவால் ஆட்கொள்ளப்பட்டு மனமாற்றமடைந்தான். அந்த மாற்றம் அவரை அயலவனுக்கு அன்பு காட்டும் நிலைக்கு அழைத்துச் செல்கின்றது.

"என் உடமைகளில் பாதியை ஏழைகளுக்குக் கொடுத்து விடுகிறேன்" (லூக்19:8) என்ற அறிக்கை, சக்கேயுவின் மாற்றத்திலிருந்து வெளிப்படும் ஈடுபாட்டைக் காட்டுகின்றது. மேலும், நான் அதை நான்கு மடங்காகத் திருப்பிக் கொடுத்து விடுகிறேன்" (லூக்19:8) என்ற அறிக்கை மூலமாக சக்கேயு தமது முன்னைய குற்றங்கள், தவறுகள், அநீதி களுக்கு பரிகாரம் தேடுகின்றார். இந்த ஒப்புரவினால் வெளிப்பட்ட

செயற்பாடுகளாகிய பிறரன்பும், பாவப்பரிகாரமும் விடுதலையை, மீட்பினை பெற்றுக் கொடுத்தது. "இன்று இவ்வீட்டிற்கு மீட்பு உண்டாயிற்று" (லூக்19:9) என்ற இயேசுவின் வார்த்தைகள் மன்னிப்பளிக்கும், தூய்மைப் படுத்தும் அருட்கொடைகளைப் பெற்றுக் கொடுக்கின்றன.

**முடிவாக**

திருச்சபை 'ஒப்புரவின் குழுமமாக' இறைவனின் குணமளிக்கும் பிரசன்னத்தை வெளிப்படுத்தும், ஒப்புரவுப் பணியாற்றும் குடும்பமாக தன்னை அடையாளப்படுத்த வேண்டியது காலத்தின் கட்டாயமாகின்றது. ஆகவே இந்தக்காலத்தின் தேவையுணர்ந்து எம்மை கறைப்படுத்தும் பாவங்களை விடுத்து எம்முடனும் பிறருடனும் இறைவனுடனும் ஒப்புரவாகுவதுடன், ஒப்புரவின் கருவிகளாகி ஐக்கியத்தையும் அமைதியையும் அவனியிலே கண்டு ஆண்டவன் அரசில் அடைக்கலமாகுவோமாக!

**அருட். சகோ. சூ. டக்ளஸ் மில்ரன் லோகு**

**"......நாம் ஒருவர் ஒருவரை தனி மனிதர்களாக, பல்லினக்குழுக்களாக, பல்வேறு நாடுகளாக, பல்வேறுபட்ட பண்பாடு, மத, சமூக அமைப்புக்கள் கொண்டவர்களாக ஏற்றுக் கொள்ளப் பழக வேண்டும். (2ம் அருள் சின்னப்பர், இரண்டாம் உலக....இல10)**

# நீதி, அமைதி, அபிவிருத்திக்காக உழைத்தல் நற்செய்திப் பரப்புரையின் ஒருங்கமைந்த செயற்பாடுகளாகும்.

**முன்னுரை**

மனித வாழ்வின் சூழலையும், சூழமைவையும் அனைத்து வாழ்வியல் அம்சங்களையும் அரவணைப்பதாக நற்செய்திப் பணி அமைகின்றது. ஏழையருக்கு, உரிமை மறுக்கப்பட்டோருக்கு, அவலங்களுக்குள் வாழ்வோருக்கு நற்செய்தியை அறிவிக்கும் பணியில் இயேசு வழிநின்று அர்ப்பணத்துடன், ஈடுபட்டு செயல்படுதலே நற்செய்திப் பரப்புரைப் பணியாகும். ஆன்மீகப்புணி மட்டும் மேய்ப்புப் பணியல்ல, மனிதன் உடலோடு பிறந்தவன், சமூகப்பிராணி. மனித மாண்பு சிதைக்கப்பட்டு, வாழ்வின் விளிம்புக்குத் தள்ளப்பட்ட மனிதரிடம் இறைக்கோட்பாடுகளை எடுத்துரைப்பது மட்டும் பயனற்றது. இறைவன் விடுதலைக்கு அழைக்கின்றார் என்று உணர்த்தி, அவ்விடுதலைக்குச் சேர்ந்து உழைப்பதே உண்மையான பணி. அதன் அடிப்படையிலேயே திருச்சபை செயல்படுகின்றது. அதாவது நீதி, அமைதி, அபிவிருத்தியை உருவாக்குதல் நற்செய்திப் பணியின் ஒருங்கமைந்த செயற்பாடுகளாகும், என்ற கருத்தமைவோடு செயற்படுகின்றது. இவ்விதந்துரைப்பை பின்வரும் கருத்துக் கோர்வைகள் நியாயப்படுத்துகின்றன.

**விவிலியப் பார்வையில்......**

“ஏழையருக்கு நற்செய்தியை அறிவிக்கவும், சிறைப்பட்டோர் விடுதலை அடைவர், பார்வையற்றோர் பார்வை பெறுவர் என முழக்கமிடவும், ஒடுக்கப்பட்டோரை விடுதலை செய்து அனுப்பவும்....” (லூக்4:18) என பகர்ந்தார் இயேசு, இதன் அடிப்படையிலேயே இயேசு தமது திருத்தூதர்களை அனுப்புகின்றார். (மத்10:1-10) எளியோருக்கு நற்செய்தியைப் பரப்ப எளியோராகி அவர்களுடன் கரையும்படி பணிக்கின்றார். இதன் மூலம் நற்செய்திப் பரப்புரைப் பணி அனைத்து மனிதருக்கும் உரியது என வலியுறுத்துகின்றார். ஏனெனில் முழு மனித ‘விடுதலை’ யைப் பெற்றுத்தரவே இயேசு மனிதனானார். இயேசு மட்டுமன்று மறுவாழ்வை உடனடி நோக்காகக் கொண்டு நிகழ்ந்த ஆதித்திருச்சபையும் தமது உடமைகளை பொதுப்பொருளாகக் கொண்டு பகிர்ந்து வாழ்ந்தார்கள். அங்கே உண்மை, நீதி, அமைதி, முன்னேற்றம் என்பன மேலோங்கிக் காணப்பட்டன.

ஏழையருக்கும், உரிமை மறுக்கப்பட்டோருக்கும், சிறப்பாக அக்கறை காட்டப்பட வேண்டும் என தூய யாக்கோப்பு குறிப்பிடுகின்றார்.(யாக்2:15-17). பல்வேறு கிறிஸ்தவ சமுதாயங்களுக்கு தூய பவுல் எழுதிய திருமுகங்களில் அநீதி, அநியாயம், தீமை, சுரண்டல், உரிமை மறுப்பு போன்ற தீய சக்திகளுக்கு எதிராக சாடுகின்றார்,(உரோ1:24-28). சமுதாயப் பாகுபாடுகள், வெறுப்பு, பகைமை போன்றவற்றுக்கு சவாலாக திருப்பணியாளர் செயற்பட வேண்டும் என தூய யோவான் வலியுறுத்துகின்றார். எனவே விவிலியத்தை நோக்கும்போது; சமூக, பொருளாதார, கலாசார, அரசியல் தாக்கங்களில் நற்செய்தி பரப்புரை செய்யப்படவேண்டும் என்று கட்டியம் பகர்வதைக் காண முடிகின்றது.

**திருச்சபையின் வளர்ச்சிப்படிகளில்**

அனைவருக்கும் மீட்பை தர பணிக்கப்பட்ட திருச்சபை தன் பொதுமைப் பண்பிற்கேற்பவும், இயேசுவின் விதந்துரைப்புக்கு இசைவாகவும் அனைவருக்கும் நற்செய்தியைப் பரப்ப விளைகின்றது. அவனியில் அமைதி, மனுக்குலத்தின் முழு வளர்ச்சி, நீதிக்கான ஈடுபாடு போன்ற காரணிகளில் திருச்சபை அதிக கவனம் செலுத்துவது கண்கூடு.

ஆரம்ப காலம் தொட்டே வறியவர்களுக்காக, வாழ்வின் விளிம்பிற்கு தள்ளப்பட்டவர்களுக்காக திருச்சபைத் தலைவர்கள் குரல் கொடுத்து வருகின்றார்கள். திருச்சபைத் தந்தையர்களான தூய அம்புறோஸ் (340-397), தூய பேசில் (330-377) தூய நசியான்சஸ் கிரகோரியார்(330-379) மற்றும் தூய கிறிஸ்சோஸ்தோம் யோவான் போன்றவர்களை இதற்கு குறிப்பிடலாம். இதில் தூய யோவான் கிறிஸ்சோஸ்தோம் அடக்குமுறைக்கு எதிராக குரல் கொடுத்து அன்பு, அமைதி, நீதி ஆகிய நற்கனிகளை இப்புவியில் நிலைநிறுத்த அனைவருக்கும் அழைப்பு விடுத்தார்.

காலப்போக்கில் மனித மீட்புக்காக, வறுமை ஒழிப்புக்காக உழைப்பதில் திருச்சபை அதிக ஈடுபாட்டுடன் செயற்பட ஆரம்பித்தது. உழைப்பவர்களின் உரிமையை வலியுறுத்தி 1891ம் ஆண்டு திருத்தந்தை 13ம் சிங்கராயர் அவர்களால் வரையப்பட்ட சுற்றுமடல் 'ரேறும் நொவாறும்' அதற்கு வழிகோலியது. இதற்கு பின்பு அன்பு, அமைதி, நீதி, சமூக முன்னேற்றம் ஆகிய காரணிகளில் திருச்சபை அதீத கவனமும், பார்வையும் செலுத்த ஆரம்பித்தது.

## இரண்டாம் வத்திக்கான் பொதுச்சங்கம்

திருச்சபையின் அடித்தள மாற்றத்துக்கு வித்திட்ட இரண்டாம் வத்திக்கான் பொதுச் சங்கமும், இப்பணிகளுக்கு முன்னுரிமை கொடுக்கின்றது. இக்கால மனிதரின், குறிப்பாக வறுமையிலும், மற்றெவ்வித துன்பத்திலும் வாடுவோரின் மகிழ்வும், நம்பிக்கையும், ஏக்கமும், கவலையும், கிறிஸ்துவைப் பின்பற்றுவோரின் மகிழ்வும், நம்பிக்கையும் ஏக்கமும் கவலையுமாகும், என 'இன்றைய உலகில் திருச்சபை' என்ற கொள்கைத் திரட்டு இயம்புகின்றது. இக்கூற்றை அடிப்படையாகக் கொண்டு ஆயர்கள் குறிப்பாக ஆயர் பேரவைகள் வியக்கத்தக்க முடிவுகளை மேற் கொண்டார்கள். இதற்கு உதாரணமாக 1968இல் கூடிய இலத்தீன் அமெரிக்க ஆயர் பேரவையைக் குறிப்பிட முடியும். தற்போதைய திருத்தந்தை 2ம் ஆருள் சின்னப்பர் இரக்கம், தொழில்-வேலை போன்ற தளங்க்ளை அடிப்படையாகக் கொண்ட சுற்றுமடல்களில் நீதி, அமைதி, மனுக்குல முன்னேற்றம் பற்றி விதந்துரைக்கின்றார்.

எனவே மேற்குறிப்பிட்டவைகளை அடிப்படையாகக் கொண்டு நோக்கின் இன்று திருச்சபை ஒரு சமுதாயமாக நீதி கேட்டு உலகை வலியுறுத்துகின்றது. உரிமை மறுக்கப்பட்டோருக்கு உரிமையைப் பெற்றுக் கொடுத்து அவனியில் அமைதியை நிலைநிறுத்த பாடுபடுகின்றது. வலுவற்றோரை வலுவுள்ளோராக்கி முழுமனிதத்தை உருவாக்க தன்னைக்கரைக்கின்றது. இவற்றை இன்று யாழ். திருச்சபையும் முன்னெடுக்கின்றது.

## யாழ். திருச்சபையின் பணித் தளங்கள்

"உலகின் இறையமைதி பரந்து நிலவிட எல்லா மனிதர்களுக்கும் நிறைவான முன்னேற்றம் வேண்டும்" என்ற திருத்தந்தை 6ம் சின்னப்பர் எடுகோளை அடிப்படையாகக் கொண்டு யாழ். மறை மாவட்டத்தில் நீதி, அமைதி, சமூக முன்னேற்றம் என்பவற்றை விருத்தியடையச் செய்யும் ஒரு நோக்குடன் யாழ். மறைமாவட்ட மனித முன்னேற்ற நடுநிலையம் 1972ம் ஆண்டு இளைப்பாறிய ஆயர் வ.தியோகுப்பிள்ளை ஆண்டகையினால் ஆரம்பிக்கப்பட்டது. நற்செய்தி பரப்புரையின் ஒரு பகுதியான ஆன்மீகப் பணி ஒருபக்கம் மேற்கொள்ளப்பட மறுபுறம் மனித முன்னேற்றத்துக்கான செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன.

அடிப்படைத் தேவைகளை நிறைவு செய்தல்; கலை, கலாச்சார, பண்பாட்டு அம்சங்களை வளர்த்தல்; கல்வி மேம்பாட்டுக்கு கைகொடுத்தல்; அடிமட்டத்தில் வாழும் மக்களின் இழிநிலையை உணர்த்தி விழிப்புணர்வு பெறச் செய்தல்; வலுவற்றோரை வலுவுள்ளோராக்குதல் போன்ற சமூக

முன்னேற்றச் செயற்பாடுகளை முன்னெடுக்கின்றது. நீதி, சமாதானத்துக்கான ஆணைக்குழுவுடன் இணைந்த செயற்பாட்டின் மூலம் நாட்டில் நீதியையும், அமைதியையும் நிலைநாட்ட தன்னால் இயன்ற முயற்சிகளைச் செய்கின்றது. குறிப்பாக, பயங்கரவாதத்தடைச்சட்டம், அவசரகாலச்சட்டம் போன்றவற்றால் கைது செய்யப்பட்டவர்களுக்கு சட்ட ஆலோசனை; அவர்களது மனைவியருக்கு பண உதவி; மனித உரிமை மறுப்புக்களை வெளி உலகிற்கு கொணருதல்; சமாதானப் பேரணி; மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தல் போன்ற செயற்பாடுகளை முன்னெடுக்கின்றது.

இவ்வாறு இறையாட்சியின் மதிப்பீடுகளான அன்பு, உண்மை, இரக்கம், நீதி, சமத்துவம், சகோதரத்துவம், பகிர்வு, மன்னிப்பு, மகிழ்ச்சி போன்றவற்றை சமுதாயத்தின் அனைத்து தளங்களுக்குள்ளும் புகுத்துகின்றது மனித முன்னேற்ற நடுநிலையம். அதன்மூலம் நற்செய்திப் பரப்புரைப் பணியை தாய்திருச்சபையின் கொள்கைகளுக்கு அமையவும், இயேசு கிறிஸ்துவின் விதந்துரைப்புக்கு இசைவாகவும் கொண்டு செல்கின்றது.

**இறுதியாக**

மனித சமுதாயத்துக்கு மீட்புக்கொணர்வதும் அதை எல்லா வகை அடக்குமுறைகளிலிருந்து விடுவிப்பதும் திருச்சபையின் பணியாகும். இதுவே நற்செய்தி அறிவித்தலாகும். நீதியை நிலைநாட்ட மேற்கொள்ளும் செயற்பாடும், உலகை உருமாற்ற மேற்கொள்ளும் ஈடுபாடும் நற்செய்திப்பணியின் மையக்கூறுகள் ஆகும். இது திருச்சபையின் தலையாய பணியாகும்.

வாழ்வுக்காகப் போராடும் மக்களின் சிக்கல்களிலும், நீதிக்காகப் பாடுபடுவோரின் சிலுவைப்பாடுகளில் பங்கேற்பதும் திருச்சபையின் கடமை. அமைதி, நீதிமிக்க சமுதாயத்தை உருவாக்கத் துடிப்பவர்களுடனும், ஏனைய சமய, கலாச்சார, சமூகப் பிரிவினருடன் இணைந்து செயற்படும்போதும் இவ் இலக்கை அடையமுடியும்.

எனினும் இவ்வாறு முப்பரிமாணம் கொண்ட நற்செய்திப் பணியை உணர்வு பூர்வமாக செய்வோர் வெகு சிலரே. மற்றைய தேவைகள் அதிகம். ஆனால் ஈடுபாட்டுடனான செயற்பாடுகள் மிகக் குறைவு. இக்குறைபாடுகளை நிவர்த்தி செய்து செயற்படும்போது உண்மையான இறையாட்சி இவ்வுலகில் மலரும்.

அருட்சகோ. அ.ஆசைநாதன்

# சமாதானத்தை நோக்கிய அரசியல் மாற்றங்களில் ஒப்புரவின் முக்கியத்துவம்

"பாலைவனத்தில் ஒருவன் கூக்குரல் ஒலிக்கின்றது. ஆண்டவர் வழியை ஆயத்தப்படுத்துங்கள். அவர் தம் பாதையை செம்மைப்படுத்துங்கள். பள்ளத்தாக்குகளெல்லாம் நிரவப்படுக; மலைகளும் குன்றுகளும் தாழ்த்தப்படுக; கோணலானவை நேராகவும், கரடுமுரடானவை சமமான வழிகளாகவும் ஆக்கப்படுக. மனிதரெல்லாரும் கடவுள் மீட்பைக் காண்பர்" (லூக்,3:4-6)

பசுமையும், செழுமையுமாகப் பயிர் வளர்ந்து பலன் அளிக்க வேண்டுமானால் மேடு பள்ளமற்ற, குன்றும் குழியுமற்ற சமதரை வேண்டும்; மனித உழைப்பும் வேண்டும், உள்நாட்டு யுத்தத்திற்கு முடிவுகண்டு நிரந்தர அமைதியை ஏற்படுத்தும் வகையில் செய்யப்பட்டுள்ள சமாதான உடன்படிக்கைகள் பல. இந்த உடன்படிக்கைகள் ஒவ்வொன்றும் எதிர்காலத்தில் ஏற்பட வேண்டிய நிரந்தர சமாதானத்திற்குப் பாடமாக அமைந்து மக்கள் மத்தியில் விழிப்புணர்வைக் கொடுத்துள்ளது. மீண்டும், மீண்டும் இந்த நாட்டை சிங்கள தேசமாக்க முற்பட்ட இனவாத சக்திகளிடமிருந்து நாட்டை விடுவித்து பல இனங்கள் வாழுகின்ற ஒற்றுமைத் தேசமாக நிமிர வைக்க வேண்டும். அதுதான் எமது தேசத்திற்கு விடிவைத்தரும் என்பதை உணர்ந்தவர்களால் இன்று நிரந்தர யுத்த நிறுத்தம், என்ற நிலையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்று கைச்சாத்திடப்பட்டது. இந்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டதால்; அரசு, விடுதலைப் புலிகள் இணக்கமும், நிரந்தர சமாதானமும் ஏற்பட்டுவிட்டதென்று நாம் நிம்மதிப் பெருமூச்சுவிடமுடியாது. ஏனெனில், இதற்குப் பின் நடைபெறும் நிகழ்வுகளெல்லாம் மேடும் பள்ளமும், குன்றும் குழியுமாகக் காட்சி தருகின்றன.

ஒருபக்கத்தில் ஐக்கிய நாடுகள் முதற்கொண்டு பல வெளிநாடுகள் இந்த நிலைமையை வரவேற்று ஊக்கம் கொடுத்துக் கொண்டிருக்கின்றன. இன்னொரு பக்கம் தமிழ் மக்களின் பெரும்பான்மையினரும், தென்பகுதி மக்களின் ஒரு பகுதியினரும் இந்த முயற்சிக்கு ஆதரவு வழங்கி வருகின்றனர். இதில் யுத்தத்தினால் ஊனமடைந்த படைவீரரும் அடங்குவர்.

மறுபக்கம் கணத்துக்கு கணம் மாறிமாறி வேடம்போடும் மாண்புமிக்க ஜனாதிபதி அம்மையார் 'சார்க்' மாநாட்டின்போது, ஏனைய

நாட்டுப் பிரதிநிதிகள் மத்தியில் உரையாற்றும்போது, 'புதிய அரசு மேற்கொள்ளும் அமைதி முயற்சிக்கு தொடர்ந்து ஒத்துழைப்பு வழங்குவேன்' என்று கூறினார். ஆனால் அங்கிருந்து திரும்பியவுடன் "ஒரு கடிதத்தினால் ஒப்பந்தத்தை ரத்தச் செய்ய என்னால் முடியும்" என்று சூழுரைத்தது மட்டுமன்றி பிக்குமாரின் ஒரு பகுதியினரையும், சில இனவாதக் கட்சிகளையும் சேர்த்துக் கொண்டு பல விதத்திலும் இந்த சமாதான முயற்சிகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்து வருகின்றார்.

இதே நேரத்தில் தமிழ் மக்கள் தமது சமாதானத்திற்கான ஆவலை உணர்வுபூர்வமாக, சர்வமதத் தலைவர்கள் ஒழுங்கு செய்த சமாதானத்துக்கான பாதயாத்திரை மூலமாகவும், மனிதநேய அமைப்புக்களும், பல்கலைக்கழக மாணவர்களும் சேர்ந்து ஒழுங்கு செய்த பொங்கு தமிழ் நிகழ்வுகளாலும் வெளிப்படுத்தினர். இந்நிகழ்வுகள் தமிழர் வாழும் எல்லாப் பகுதிகளிலும் நடைபெற்றன. பல மதத் தலைவர்களும் ஒன்றிணைந்த குரலாகவும், தனித்தனியாகவும் மக்களின் உணர்வுகளுக்கு ஊக்கமும், ஆதரவும் வழங்கியதோடு அரசையும், விடுதலைப் புலிகளையும் பாராட்டி, நிரந்தர சமாதானத்திற்கு ஊக்கமளிக்கும் வகையில் பல அறிக்கைகளையும் விடுத்துள்ளார்கள். இப்படியான நிகழ்வுகள் தென்பகுதியைச் சேர்ந்த எதிர்ப்புச் சக்திகளுக்கு தாங்கமுடியாத கோபத்தையும் எரிச்சலையும் ஏற்படுத்தியது. எனவே அவர்கள் சமாதானத்திற்கெதிரான பாதயாத்திரைகளையும், எதிர்ப்புப் பிரசாரங்களையும், ஆர்ப்பாட்டப் பேரணிகளையும் நடாத்தியது மட்டுமன்றி, சட்ட ரீதியான வழக்குத் தாக்கல் செய்யும் அளவுக்கும் முன்னேறினார்கள். அத்துடன் வாகரைக் கடலில் ஏற்பட்ட பயங்கரமான நிகழ்வும், தொடர்ந்து கிழக்குப் பகுதிக் கடலில் நடைபெற்றுவரும் கடற்படையினரின் அடாவடித்தனமும், யாழ். தீவகப் பகுதியில் நிலை கொண்டிருக்கும் கடற்படையினரின் முரண்பட்ட போக்கும் ராணுவத்தினருக்குள் இருக்கும் முரண்பாட்டை துல்லியமாக எடுத்துக் காட்டுகின்றது.

இந்நிலையில் நாட்டின் 90% மக்களின் ஆதரவைப் பெற்று பிரதமராகிய ரணில் விக்கிரமசிங்க சமாதானத்துக்கான கருத்துக் கணிப்பின்போது 80% மக்கள் அதை விரும்பிய போதும், மீண்டும் மக்களிடமும், மக்கள் பிரதிநிதிகளிடமும் 'பிளவுபட்டிருக்கும் நாட்டை ஐக்கியப்படுத்த வாருங்கள்' என்று பகிரங்கமாக அழைப்பு விடுத்தார். சமாதானத்தை எதிர்ப்பவர்கள் சிலர்தான் என்றாலும் அவர்கள் வக்கிர உணர்வு மேலோங்கியவர்கள். சமாதான முயற்சியைக் குழப்பவேண்டும் என்று கங்கணம் கட்டிக்கொண்டிருப்பவர்கள். எனவே தென்பகுதி மக்கள் வீதியிலிறங்கி சமாதானத்துக்கான குரல் கொடுக்க வேண்டும் என்று

வடக்கிலும், கிழக்கிலும் மாத்திரமல்ல தென்பகுதியிலிருந்தும் குரல்கள் ஒலிக்கத் தொடங்கின.

இது இவ்வாறிருக்க 18 ஆண்டுகளுக்கு மேலான யுத்த அனுபவங்களையுடைய விடுதலைப்புலிகள் அமைப்பினர், வரலாற்று ரீதியான பாடத்தைப் பெற்றவர்களாக யுத்த நிறுத்தம் /பேச்சு வார்த்தை /சமாதானம் என்ற நிலையில் மிகவும் தீவிரமாக இருக்கின்றார்கள். தென்பகுதி எதிர்ப்புச் சக்திகளின் செயற்பாடுகளை இவர்கள் கருத்தில் எடுப்பதாகத் தெரியவில்லை. மாறாகத் தமது செயற்பாட்டுக்கு வலுவூட்டும் வகையில் மலையக, முஸ்லீம் மக்களின் பிரதிநிதிகளுடன் கலந்துரையாடிச் சில ஒப்பந்தங்களையும் செய்துள்ளார்கள். இச்செயற்பாடும், "தீமைசெய்து துன்புறுத்துவதைவிட நன்மை செய்து துன்புறுவது மேல்" (1இரா, 2:17) என்று புனித இராயப்பர் சொல்வதுபோல் 'என்னுயிருக்கு அச்சுறுத்தல் ஏற்படும் போதும் சமாதான முயற்சிகள் தொடரும்' என்ற பிரதமரின் உறுதியும் சமாதானத்துக்கான தேவையைப் பறைசாற்றுவதாகவே அமைகின்றது. பெரும் நம்பிக்கையுணர்வோடு இருபகுதியிலுமிருந்து வெளிப்படும் கருத்துக்கள் மத்தியில் இனவாத அமைப்புக்களின் முரண்பட்ட கருத்துக்கள் அடிபட்டுப் போகின்றது. சர்வதேச அனுசரணை, தேசிய ரீதியான சமாதான உணர்வுகள், வெளிப்பாடுகள் பரந்த அளவில் மக்களின் மனங்களை ஆக்கிரமித்து வருகின்றன.

இவ்வாறான நிலைப்பாடு இருந்தபோதும் மக்களுக்கு இடையூறு விளைவிக்கும் சில முரண்பாடான செயற்பாடுகள்; குறிப்பாக ஒப்பந்தத்தின்படி பொதுஇடங்களில் (பாடசாலை/ ஆலயங்கள்) தங்கியுள்ள ராணுவத்தினரை அகற்றுவதில் ஏற்படும் தாமதமும், முரண்பட்ட நிலையும், இன்னும் பாதைத்தடைகளும் சோதனை நிலையங்களும் செயற்படு வதும் ஏ,9 பாதை திறக்கப்பட்டபோதும் இலகுவான நிலையில் பயணம் செய்யமுடியாது மக்கள்படும் கஷ்டங்களும், வரிச்சுமைகளினால் ஏற்படும் அங்கலாய்ப்புகளும், மனமடிவுகளும் நீக்கப்பட வேண்டியவையே.

எமது நாட்டின் சாதாரண மக்களின் மத்தியில் உள்ள புரிந்துணர்வு இன்றுவரை 'ஓடும் புளியம்பழமும்' போல் ஒட்டாமலே இருந்து வருகின்றது. பல இனங்கள் வாழுகின்ற ஒற்றுமை நாடாக எம்நாடு மாற எம் மக்களுக்குள், உள்ளார்ந்த புரிந்துணர்வும், ஏற்றுக்கொள்ளும் மனப்பக்குவமும் வேண்டும். யுத்த நிறுத்த நிலை ஏற்பட்டவுடன் காவலரண்களில் இருக்கும் ராணுவவீரர்களை ஏளனம் செய்வதும், பகிடிக்கதைகள் சொல்வதும், பட்டாசு கொளுத்திப் போடுவதும் எந்த விதத்தில் சரியானது? அத்துடன் பாதை திறந்தவுடன் தென்பகுதியில்

இருந்து வரும் சிங்கள மக்கள் ராணுவத்தில் பணிபுரியும் தம் உறவினர்களைப் பார்த்துப்போவதுடன் நீண்ட காலத்தின்பின் யாழ்ப்பாணத்தைப் பார்க்கவும் வந்துபோகலாம். இருந்தும் இவர்கள் எமது இடத்தைதேடி நம்பிக்கையோடு வந்தவர்கள் அவர்கள் மனம்நோகும் விதத்தில் எமது இளைஞர்கள் சிலர் நடந்து கொள்வது வேதனைக்குரியதல்லவா? முஸ்லீம் சமூகத்தினரை வரவேற்பதற்கு தலைவர்கள் ஆயத்தமாக இருக்கும்போது, இங்கு வந்திருக்கும் முஸ்லீம் மக்களின் பிள்ளைகளை வம்பிற்கிழுத்து அதனால் கைகலப்புக்கள் ஏற்படும் சம்பவங்களும் விலக்கப்படவேண்டியவையே. தென்பகுதி மக்களிடமிருந்து சமாதானத்திற்கான குரலொலி ஒலிக்கட்டும் என்று அறைகூவல் விடுத்த நாம் இங்கு சமாதானத்திற்கான நோக்கோடு வருகை தந்த பேரணிகளை அந்த நேரம் மட்டும் முன்நின்று வரவேற்று உபசரித்துவிட்டு அதன்பின் அவர்களை வீதியில் நிற்கவிடுவது முறையா?

இவ்வாறான மேடுகளும் பள்ளங்களும் நிறைந்த எமது நாட்டில் எவ்வாறு நிரந்தர சமாதானம் ஏற்படமுடியும்? உண்மைச் சமாதானம் உள்ளத்தில் திருப்தியை ஏற்படுத்த வேண்டும். உள்ளத்திருப்தி ஏற்படப் புரிந்துணர்வுடன் கூடிய ஏற்றுக்கொள்ளும் மனப்பக்குவமும் ஒப்புரவும் அவசியம். எமது மக்களின் பண்பாடுகள் சிதைக்கப்பட்ட நிலையில், ஒரே சமூகத்தில் புரிந்துணர்வு அற்ற நிலையில் குடும்பத்தில் பெற்றோர் பிள்ளைகளுக்கிடையே முரண்பாடு/ஆசிரியர், மாணவர்களுக்கிடையே முரண்பாடு/ பெரியோர்களுக்கும், சிறுவர்களுக்குமிடையே முரண்பாடு இவைகள் எல்லாம் தீர்க்கப்பட வேண்டும். அத்துடன் தென்பகுதி வாழ் சாதாரண மக்களுக்கு தமிழ்ப் பகுதிகளில் நடைபெறும் உண்மைச் சம்பவங்கள் எதுவும் சரியாகத் தெரியாது. இங்கு வாழ்கின்ற மக்கள் இந்த யுத்தத்தினால் எந்தளவுக்குப் பாதிப்படைந்து, விரக்தியடைந்துள்ளார்கள் என்பது எல்லாம் தெரியாது என்றுதான் சொல்ல வேண்டும். ஏனெனில் சமாதானத்திற்கான தென்பகுதி சகோதரர்களின் கூற்றும், நாம் சந்தித்த சில தென்பகுதி சகோதரர்களின் கூற்றும் எமக்கு இவற்றையே தெளிவுபடுத்துகின்றன.

எனவே, உயர்தரத்தில் வாழ்பவர்கள் மட்டுமல்ல, சாதாரண நிலையில் இந்நாட்டில் வாழும் எல்லா இனமக்களும் எதுவித அரசியல் கலப்புமின்றி ஒருவரை ஒருவர் புரிந்துகொண்டு, ஒருவர் ஒருவரின் துன்பநிலைகளை இனம்கண்டு, பகிர்ந்துகொண்டு, பழையவற்றை மனதில் வைத்துப் பகைமை பாராட்டாமல் மன்னித்து மறந்து நல்லுறவை வளர்த்துக் கொள்வது இன்றைய தேவையாக இருக்கின்றது. இவ்வாறான நல்முயற்சியில் தென்பகுதியைச் சார்ந்த சமாதானத்திற்கான ஊக்குவிப்பாளர்கள் சிலர் முயற்சி செய்து வருகின்றார்கள். அவர்களுக்கு

எம்மில் சிலர் மட்டுமன்றி இயலுமான அளவு எல்லோரும் எமது நேசக்கரங்களை நீட்டி கூட்டுறவு முறையில் இம்முயற்சியில் இறங்க வேண்டிய தேவையும் இருக்கின்றது. யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற ஆயுதக் கையளிப்பின்போது அருட்தந்தை சி.ஜி.ஜெயக்குமார் அடிகளார் கூறிய வார்த்தைகளை இந்நேரம் நினைவு கொள்வது பொருத்த மாகும். "உடலில்மட்டில் நிராயுதபாணிகளாக மாறுவது மட்டுமல்ல உள்ளத்தில் நிராயுதபாணியாக மாறுவதினால் தான் உண்மைச் சமாதானத்தை எட்டமுடியும்." எனவே, தற்காலகட்டத்தில் நடைபெற்றுவரும் சமாதான முயற்சிகள் எதிர்ப்புவாதிகளினால் குழப்பமடையும் நிலைவரினும், இந்நாட்டில் வாழும் பல இன மக்கள் மத்தியில் உள்ளார்ந்த புரிந்துணர்வினால் நிராயுதபாணிகளாகி ஒருவரை ஒருவர் ஏற்றுக்கொள்ளும் நிலை ஏற்பட்டுவிடில் மீண்டும் ஓர்முறை இப்படியான கொடிய யுத்தம் ஏற்படுவதைத் தவிர்த்துக் கொள்ளும் சக்திகளாக சாதாரண மக்கள் மாறிவிடுவார்கள். எனவே, நாம் எமது ஆலயங்களில் பாடும் பாடலில் வரும்:

'நிறை வாழ்வில் மனிதம் வளர
பணி வாழ்வினிலே பாதை ஆகுவோம்
ஓர்வானம் ஓர்பூமி ஆனதுபோல்
ஓர்மக்கள் என்றாகி வாழ்ந்திடுவோம்'

என்ற கூற்றுக்கமைய நாம் உள்ளத்தில் நிராயுதபாணிகளாக ஒப்புரவின் அவசியத்தை உணர்ந்தவர்களாக அதன் பாலமாக மாறுவோம்.

செல்வி ம.பத்மா

**அனுபவவாயிலாக நாம் அறிந்த உண்மையென்னவெனில் - நாடுகளை எதேச்சாதிகாரமாகப் பிரிப்பது, வலுக்கட்டாயமாக மக்களை இடம் பெயரச் செய்தல், எல்லையற்ற ஆயுதக் குவிப்பு, அதிநவீன யுத்த உபகரணங்களை வரம்பின்றிப் பிரயோகித்தல், தனி மனிதர்களதும், மக்கள் அனைவரதும் அடிப்படை உரிமைகளை மீறுதல், சர்வதேச சட்டங்களையும் புரிந்துணர்வுகளையும் மீறுதல், சர்வாதிகார ஆட்சி முறைகளையும் கருத்துக்களையும் திணித்தல் போன்றவை மனித சமுதாயத்தின் அழிவிலேயே வந்து முடியும் என்பதாகும். (2ம் அருள் சின்னப்பர், இரண்டாம் உலக....இல.2)**

# நீதி ஒப்புரவு சமாதானத்திற்கான பாதையில் இளைஞர்களின் பங்கு

எங்கே நீதி உண்டோ அங்கே ஒப்புரவு ஏற்படும். எங்கே ஒப்புரவு மலர்கின்றதோ அங்கே அமைதி பிறக்கும். இம் மூன்று பண்புகளும் ஒன்றோடொன்று இணைந்து செல்லும் தன்மையுடையது. ஒன்றை ஒன்று ஊக்குவிக்கும் திறன் கொண்டது. இப்பண்புகள் நிறைந்த சமுதாயக் கட்டமைப்பே சிறந்த நாட்டைக் கட்டியெழுப்பும் தூண்களாக அமைவன. இதற்கான பொறுப்பை ஏற்க வேண்டியது இன்று இளைஞர்களின் பாரிய கடனாகின்றது. இப்பாதையில் பயணிக்கும் இளைஞர்கள் பல சவால்களை எதிர்கொள்ள வேண்டியிருக்கும்.

இன்று நவீன விஞ்ஞானத்தின் வளர்ச்சிப்படி மனிதனை பிரமிக்க வைக்கின்றது. அடுத்தடுத்த நூற்றாண்டுகளில் விஞ்ஞானம் இன்னும் என்னவெல்லாம் சாதிக்கப் போகின்றதோ என்ற எதிர்பார்ப்பு தற்பொது உண்டு. மனிதன் தன் வாழ்வியலின் இருப்பை உறுதிப்படுத்த எப்படியோ எல்லாம் பாடுபடுகின்றான். வசதிகள் வாய்ப்புக்களைப் பெருக்கி பொருளாதாரத்தில் தன்னிறைவு காணத் துடிக்கின்றான். ஆனால் மறுபுறத்தே அழிவுகளும், அவலங்களும், நம்பிக்கையீனங்களும், நிம்மதியற்ற வாழ்வும் மனித வாழ்வை ஆக்கிரமித்து அலைக்கழிக்கின்றன. குறிப்பாக இன்று வளர்ந்துவரும் நாடுகளில் பலவிதமான போராட்டங்கள் தலைதூக்கி அழிவுகளுக்கும் நாசத்துக்கும் வித்திடுகின்றன. வன்செயல்களின் கோரத் தாண்டவம் மக்களை ஏதிலிகளாக்கி நிம்மதி இழக்க வைக்கின்றது. இதற்கு அடிப்படை மனித மாண்பு மதிக்கப்படாமை. நீதி பேணப்படாமை. ஒருவரை ஒருவர் ஏற்றுக் கொள்ளாமை. ஒருவர் உரிமைகளை மற்றவர்கள் மதிக்காமை. இவைகள் அடிப்படையில் முதலில் குடும்பங்களிலும் பின் தான் சார்ந்த சமுதாயத்திலும் நாட்டிலும் உலகளாவிய ரீதியிலும் கட்டியெழுப்பப்பட வேண்டும். இதற்காக முன்னின்று உழைக்க வேண்டியவர்கள் வருங்காலத் தலைவர்களான இளைஞர்களே. ஆனால் சூழலின் தாக்கத்தால் பலவித அடிமைத் தனங்களுக்கு உட்பட்டு மீளமுடியாது இப்பொறுப்பிலிருந்து நழுவும் மனப்போக்கை கொண்டிருக் கிறார்கள்.

**சூழலும் இளைஞர்களும்**

இளைஞர்களுடைய சக்தியை காட்டாற்று நீருக்கு ஒப்பிடுவர். இது அணைகட்டி நெறிப்படுத்தப்பட்டு தகுந்த முறையில் பயன்படுத்தப்பட்டால் அபரிமிதமான பயன் விளைவிக்கும். அன்றேல்

அழிவையே ஏற்படுத்தும். இவ்வாறு இளைஞர் சக்தியும் மாபெரும் சக்தியே. அவர்களால் சாதிக்கமுடியாதது எதுவுமே இல்லை என்ற அளவுக்கு அவர்கள் செயற்பாடு அமைந்துள்ளது. அப்படிப்பட்ட இளைஞர்கள் இன்று எங்கே போய்க் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் வாழும் சூழல் அவர்களை எவ்வாறு உருவாக்குகின்றது. அவர்கள் வாழுமிடத்தில் எவ்வாறு இசைவாக்கம் பெற்றிருக்கின்றார்கள்? தான் சார்ந்த , தன் குடும்பம் சார்ந்த, தன் சமுதாயம் சார்ந்த அனைவரின் நலனுக்காக போராட வேண்டியவர்கள் இப்பொறுப்பிலிருந்து நழுவப் பார்க்கின்றார்கள். பலவிதமான அடாவடித் தனங்களில் ஈடுபட்டு தங்கள்மேல் சேற்றைப் பூசிக் கொள்கின்றார்கள். பாடசாலைகளில் பக்குவமாக உருவாக வேண்டியவர்கள் பராரிகளாக உருவெடுக்கின்றார்கள். மது, போதைவஸ்து போன்ற பாரிய தீமைகளுக்கடிமையாகி மீளமுடியாதிருக்கின்றார்கள். குழு மோதல்களில் ஈடுபட்டு குட்டிச்சுவராகப் போகின்றார்கள். சினிமாவின் தாக்கத்தால் சீரழிந்து போகின்றார்கள். சமூக நன்மைகளுக்காக குரல் கொடுக்க வேண்டியவர்கள், நீதியையும் அமைதியையும் நிலைநாட்ட வேண்டியவர்கள் தங்கள் சுய இன்பத்துக்காக கால்போன போக்கில் மனம்போன போக்கில் நடக்கத் தலைப்படுகின்றார்கள். இதற்கு அடிப்படை ஆண்டவரில் அச்சமற்ற வாழ்வாகும். நீதிமொழிகள் ஆகமம் "ஆண்டவரில் கொள்ளும் அச்சமே ஞானத்தின் தொடக்கம்" (நீதி 1:7a) என்கின்றது. சாலமோன் அரசனை எவ்வாறு ஞானம் வழி நடத்தியதோ அவ்வாறே இன்றைய இளைஞர்களும் ஞானத்தால் வழிநடக்க வேண்டியவர்கள். தொடர்ந்து இவ்வாகமம் "பிள்ளாய் தீயவர்கள் உன்னைக் கவர்ச்சியூட்டி இழுப்பார்கள். நீ அவர்களுடன் போக இணங்காதே. அவர்கள் உன்னைப் பார்த்து, எங்களோடு வா பதுங்கியிருந்து எவரையாவது கொல்லுவோம். யாராவது ஒரு அப்பாவியை ஒளித்திருந்து தாக்குவோம்." (நீதி 1:7-10) என்று தொடர்கிறது. எனவே ஞானத்தில் பற்றுக்கொண்டு நீதியிலும் ஒழுக்கத்திலும் மிளிர வேண்டிய தேவை இருக்கின்றது. இப்படிப்பட்டவர்களால்தான் நீதியை பேணி அமைதியை மலர வைக்கமுடியும்.

**இறைவார்த்தையின் ஒளியில்**

இறைவார்த்தையின் ஒளியில் இவற்றை ஒப்புநோக்குதல் ஏற்புடையது. புனித யாக்கோபு "அமைதி ஏற்படுத்துவோர் விதைத்த அமைதி என்னும் விதையிலிருந்து நீதி என்னும் கனி விளைகின்றது." (3:18) என்கின்றார். இதனால் அமைதிக்கும் நீதிக்கும் உள்ள உறவு தெளிவுபடுகின்றது. அமைதியும் நீதியும் பறவையின் இரு இறக்கைகள் போன்றது. ஒரு இறக்கை இன்றி அது தன் இலக்கை அடைவது முடியாத ஒன்று. மத்தேயு நற்செய்தியும் "அமைதி ஏற்படுத்துவோர் பேறுபெற்றோர்.

ஏனெனில் அவர்கள் கடவுளின் மக்கள் எனப்படுவர்.'' தொடர்ந்து அடுத்த வாய்க்கியத்தில் ''நீதியின் பொருட்டு துன்புறுத்தப்படுவோர் பேறு பெற்றோர். ஏனெனில் விண்ணரசு அவர்களுக்குரியது'' (மத்5:9-10) என்கின்றது. இங்கு அமைதியை ஏற்படுத்த நீதிக்காகத் துன்புற வேண்டும் என்னும் கருத்து விரவி நிற்பதைக் காணலாம். இவைகள் கட்டியெழுப்பப்படுவது ஒருவரை ஒருவர் ஏற்றுக்கொள்ளும், புரிந்துகொள்ளும் பரஸ்பர நம்பிக்கையின் அடிப்படையில் தான் அமைகிறது. பகைவரையும் மன்னித்த ஏற்றுக் கொள்ளுங்கள் என்ற இயேசுவின் பரந்த மனப்பான்மை இதற்கு வலுச்சேர்க்கின்றது. (காண். மத். 5:43-44)) எங்கே ஏற்புடமை என்னும் ஒப்புரவு நிலவுகின்றதோ அங்கே நீதியும் அமைதியும் தழைத்தோங்கும்.

இந்தப் பாதையில் பயணம் செய்யும் அனைவரிலும் சிறப்பாக இன்றைய இளைஞரின் நிலை என்ன, எவ்வாறு அவர்கள் பங்கு இருக்க வேண்டும் என்று நோக்குவது இன்று காலத்தின் தேவையாக எழுந்துள்ளது. 2வது வத்திக்கான் பொதுச்சங்க அமர்வு நடந்து கொண்டிருந்த வேளை திருத்தந்தை 23ம் அருளப்பர் வெளியிட்ட 'அவனியில் அமைதி' என்ற ஏடு உலக அமைதி பற்றி திருச்சபை வழங்கியுள்ள போதனைக்கு மிகவும் அடிப்படை முக்கியத்துவம் வாய்ந்தது. ''உலகில் அமைதி நிலவ வேண்டுமாயின் இறைவன் உலகுக்கென வகுத்த ஒழுங்கு முறையை அனைவரும் கடைப்பிடிக்க வேண்டும்'' என்ற சொற்களோடு இந்த ஏடு தொடங்குகின்றது. மேலும் இலத்தீன் அமெரிக்க ஆயர் பேரவையின் மெதலீன் மகாநாடு (1968) அமைதி பற்றி முக்கியமான ஓர் ஏடு வெளியிட்டது.

கிறிஸ்தவ கண்ணோட்டத்தில் பார்க்கும்போது அமைதி என்பது நீதியின் அடித்தளத்தில் கட்டி எழுப்பப்படுவதாகும். மேலும் அமைதி என்பது ஒரு தொடர் பொறுப்பு. அதாவது அமைப்புக்களையும் மனநிலைகளையும் தொடர்ந்து மாற்றி அமைப்பது தேவை. இறுதியாக அமைதி என்பது அன்பிலிருந்து பிறப்பதாகும்.

அன்புதான் அனைத்திற்கும் அடிப்படையானது. இந்த அன்பு என்னும் புரிந்துணர்வு அடிப்படையில் கட்டி எழுப்பப்படும் எதற்கும் வலிமை அதிகம் உண்டு. எனவே இந்தப் பாதையில் உழைக்க வேண்டிய பொறுப்பு இளைஞர்களுக்கு நிறையவே உண்டு. உலகின் எதிர்காலம் இவர்கள் கையில்தான் தங்கியுள்ளது. இன்று வளர்ந்து வரும் நாடுகளை எடுத்துக் கொண்டால் அமைதி அழிந்து நீதி குழிதோண்டிப் புதைக்கப்பட்டு ஒப்புரவற்ற தன்மையால் அனைத்தும் சீரழிந்து கிடக்கின்றது. அதற்குப் பொறுப்பேற்க வேண்டியவர்கள் யார்?

அரசியல் வாதிகளா? சமூகவியலாளர்களா? மதவாதிகளா? அன்றேல் இளைஞர்களா? பல வேளைகளில் உரிமைகள் மறுக்கப்படுவதால் இளைஞர்கள் தீவிரவாதம் என்னும் எதிர் வினைக்கு ஆளாகின்றார்கள். ஆயுதங்களை கையில் எடுத்துக் கொண்டு போராட்டங்களில் ஈடுபடுகின்றார்கள். இதைப்பற்றி வத்திக்கான் சங்கம் குறிப்பிடும்போது "நிறுவன அமைப்புப் பெற்ற அநீதியின் காரணமாக எண்ணிறந்த மக்கள் உரிமை மறுக்கப்பட்டு மனித மாண்புக்குக் கீழ்ப்பட்ட நிலைக்குத் தள்ளப்படுகின்றனர். இவர்களின் பொறுமைக்கும் எல்லையுண்டு. இவர்கள் நீதி வேட்கையால் உந்தப்பட்டு வன்முறையைக் கையாளுவார்களேயானால் அது நியாயமானதே." என்கின்றது. அவனியில் அமைதி என்னும் சுற்றுமடலில் 23ம் அருளப்பர் புதியதோர் அணுகுமுறையைப் பயன்படுத்தினார். "மனித உரிமைகளை மதித்து நீதியை வளர்த்தலே உலக அமைதியின் அடித்தளம்" என்கிறார்.

இந்த வகையில் நீதிக்காகவும் அமைதிக்காகவும் போராட வேண்டிய தேவை இளைஞர்களுக்கு உண்டு என்பது வெள்ளிடை மலை. உரிமைகளை இழந்து மனித மாண்பு மறுக்கப்பட்டு அநீதிகள் என்னும் சங்கிலியால் விலங்கிடப்பட்ட மக்களுக்கு உரிமை வாழ்வும் விடுதலை வாழ்வும் பெற்றுக் கொடுக்க வேண்டிய பாரிய பணி இளையோருடையதே. கிறிஸ்துவும் இப்பணிக்காகவே நான் வந்தேன் என்றார் (லூக்4:16-21). இதே அநீதிகளால் அவர்கள் ஆட்கொள்ளப்பட்டு (காண். லூக்) நிதானப் போக்கை இழந்துவிடாது செயற்பட வேண்டிய பொறுப்பும் அவர்களுக்குள்ளது. இளம்கன்று பயமறியாது என்பார்கள். அநீதிகளைக் களைகின்றோம் என்ற வேகத்தில் அதிதீவிரவாதத்துக்குள் வீழ்ந்து துன்பங்களையும் துயரங்களையும் அழிவுகளையும் பெருக்குதல் கூடாது. கிறிஸ்தவ மதிப்பீடுகளை ஒதுக்கிவிட்டுத் தான் தோன்றித் தனமாக செயற்படக்கூடாது.

**கிறிஸ்துவே எமது முன்னோடி**

கிறிஸ்துவும் அன்று சமூக-அரசியல் அநீதிகளுக்கெதிராகப் போர்க்கொடி தூக்கியவர்தான். அன்று மக்களை அடிமைப்படுத்தி இவர்களை சுரண்டி வாழ்ந்த வர்க்கத்துக் கெதிராக மிகவும் கடும்போக்கைக் கையாண்டவர். காரசாரமாக அவர்களைக் கண்டித்தவர். சமூகத்தில் உயர் அந்தஸ்தில் வாழ்ந்தவர்களை வெள்ளையடிக்கப்பட்ட கல்லறை என்றும் விரியன் பாம்புக் குட்டிகள் என்றும் விமர்சித்தவர் (காண். மத். 23:1-36) யேசு தெரிந்து கொண்ட முதன்மைச் சீடர் இராயப்பர் ஒரு தீவிரவாதி எனப்படுபவர். இயேசு யூதர்களால் கைது செய்யப்பட்ட வேளை அவர் வாளை உருவி மால்தஸ் என்ற படை வீரனைத் தாக்குகின்றார். அந்த தீவிரவாதச் செயலை இயேசு அங்கு

அனுமதிக்கவில்லை. அதை ஊக்குவிக்கவில்லை. மாறாக வாளை உறையில் போடும்படி பணிக்கின்றார் (காண். யோ 18:10-11). ஆனால் மறுபக்கம் அவர் அநீதிகளுக்குத்துணை போகவில்லை. பேசாமடந்தையாக இருக்கவுமில்லை. ஜெருசலேம் தேவாலயத்தில் புயலென சீறியெழுந்து ஆலயத்தை அசிங்கப்படுத்திய வியாபாரிகளைச் சாட்டையால் விரட்டுகின்றார். பெரிய குருவிற்கு இப்படியான பதில் கூறுவதென கேட்டு அடித்தவனை "நான் தவறாகப் பேசியிருந்தால் தவறு எது எனக்காட்டு. சரியாகப் பேசியிருந்தால் ஏன் என்னை அடிக்கிறீர்?" (யோ18:23) என்றார். தான் அநீதியாகத் தண்டிக்கப்பட்டதைக் கண்டித்தவர் பல சந்தர்ப்பங்களில் பகைவனையும் அன்புசெய் என்று ஒப்புரவின் மேன்மையையும் வலியுறுத்தினவர் (காண். மத்.5:38-43)

இந்த வகையில் கிறிஸ்துவே எங்களுக்கு மேல்வரிச்சட்டம். சமத்துவமும் சமதர்மமும் ஓங்கும்போது அநீதி அழிந்து ஒப்புரவு ஏற்பட்டு அதனால் அமைதி நிலவும். வன்செயலுக்கு வன்செயல் என்று அது விரிந்து செல்லுமானால் வன்செயலே எங்கள் எச்சமாகவும் முதிசமாகவும் மாறும். மானிட விழுமியங்களைப் புறம் தள்ளிவிட்டு நீதியையும் சமாதானத்தையும் நிலைநாட்டுவது கானல் நீரை கண்டு ஓடுவது போலாகும். எனவே இளைஞர்கள் உணர்ச்சிக்கு அடிமையாகாது ஒரு வரையறைக்குள் நின்று அனுபவம்மிக்கோரின் வழிநடத்தலின் பின்னணியில் இதற்காக உழைப்பது பயன் தருவதாக அமையும்.

ம. யேசுதாசன்

**எல்லா மக்களுக்கும் நான் மீண்டும் விடுக்கும் அழைப்பு என்னவெனில் இனக்குரோதத்தின் பல்வேறு வடிவங்களையும் எதிர்த்துப் போராட சகலவிதமான தப்பெண்ணங்களையும் மேற் கொள்ள வேண்டும்; இதற்கு ஒவ்வொரு மனிதனுள்ளும் இருந்தும் அடிப்படை மனித மாண்பையும் நன்மைத்தனத்தையும் ஏற்று எல்லோரும் இறைவன் ஒன்று சேர்க்க விரும்பும் ஒரே மனித குடும்பம் என்ற உணர்வைக் கொண்டிருக்க வேண்டும். (திருத்தந்தை 2ம் அருள் சின்னப்பர், இரண்டாம் உலக.....இல.5)**

# அருட்தந்தை ஜெயக்குமாருடன் நேர்காணல்

**1. அமைதிக்கு ஒப்புரவின் அவசியம் பற்றி திருவிவிலியப் பின்னணியுடன் உங்கள் விளக்கத்தை தருவீர்களா?**

இன்று தற்காலச் சூழ்நிலையில் முக்கியமாக இலங்கையில் போர் ஒன்று இடம்பெற்று இப்போது புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளனர். முதலில் புலிகளும் பின் அரசும் இதில் கையெழுத் திட்டனர். இதனால் தற்போது போர் அற்ற சூழல் ஏற்பட்டுள்ளது. எனினும் இந்தப்போர் முழுமையாக நீங்கவேண்டுமென்றால் நிரந்தர அமைதியை நோக்கி நகர வேண்டும். அதற்கு பல வகையான அம்சங்களை உள்ளடக்க வேண்டும்.

1) அரசியல் ரீதியிலான தீர்வு:-
அதாவது தமிழரின் அடிப்படைப் பிரச்சனைக்கு தீர்வு

2) போராலும், கலவரத்தாலும் பிளவுபட்ட தமிழ், சிங்கள இனங்களிடையே ஒப்புரவு தேவை.

இது ஒரு கிறிஸ்தவ சொற்பதமாக இருந்தாலும் இன்று அவசியம் அனைவருக்கும் தேவைப்படும் ஒரு சொல்லாக உள்ளது என நான் கருதுகின்றேன்.

ஒப்புரவை வேதாகம அடிப்படையில் நோக்கினால்; மன்னிக்க மனமில்லை என்றால் குரோத மனப்பான்மையும், பழிவாங்கும் மனப்பான்மையும் தலைதூக்க இடமுண்டு. இயேசு கூறுகின்றார் “உன் பகைவரை அன்பு செய்” என்று. கண்ணுக்குக் கண், பல்லுக்குப் பல் என்றால் எம் நாட்டில் குருடர்கள் தான் அதிகரிப்பர். அதனால் கிறிஸ்தவ விழுமியத்திலிருந்து எழும் ஒப்புரவை வலியுறுத்துகின்றோம். அதற்கு திருவிவிலியத்தில் பல சான்றுகள் உள்ளது. உ+ம், இயேசு சிலுவையில் தொங்கியபோது தனக்கு தீங்கிழைத்தவரை மன்னித்தார். தந்தையைப் பார்த்து இவர்கள் அறியாமல் செய்கிறார்கள் என்றார். அவர்கள் அறியாமல் செய்கிறார்கள் என்றால் அவர்கள் வேண்டுமென்று செய்யவில்லை தாங்கள் செய்வது சரிஎன நினைத்துச் செய்கிறார்கள். தம் மதத்தை, இனத்தை காப்பாற்ற வேண்டுமென்ற நல்ல நோக்குடன் செய்ததாக எண்ணினர். அதனால் தம் எண்ணம் பிழையென நினைக்கவில்லை.

இதுதான் இன்று நடக்கிறது. பெரும்பான்மையான சமூகத்தினர் தாம் செய்வது சரி என நினைத்து சிறுபான்மை இனத்தவரின் உரிமைகளை மறுப்பதால் தம் இனம் பாதுகாக்கப்படும். நாடு பிளவுபடாது என நினைக்கிறார்கள். இது அவர்கள் அறியாமல் செய்யும் செயல்.

எனவே ஒப்புரவு மிகவும் முக்கியமானது. இது இல்லாமல் நாட்டில் சமாதானம் ஏற்படுமென்று யாரும் சொல்லிவிடமுடியாது. இது பல நாடுகளில் வலியுறுத்தப்பட்ட விடயமாகும்.

ஒப்புரவு இல்லை என்றால் மீண்டும் எமது மனங்களில் குரோதமும் பழிவாங்கும் உணர்வும் தொடரும். அதனால் அமைதி ஏற்படுவதற்கான சாத்தியக்கூறுகள் மிகமிகக் குறைவு என்றுதான் நான் கருதுகிறேன்.

**2. போர் ஓய்ந்து அமைதிக்கான (சமாதானத்திற்கான) முன்னெடுப்புக்கள் நிகழ்ந்து கொண்டிருக்கும் எம் நாட்டில் ஒப்புரவு எவ்வகையில் இடம்பெற வேண்டும் என நீங்கள் விரும்புகின்றீர்கள்?**

சிங்கள மக்கள் தமிழரின் உரிமைகளைப் பறித்து இரண்டாம் தரப் பிரஜைகளாக மாற்றும் ஒரு எண்ணக் கோர்வையில்தான் இருக்கிறார்கள். அத்தோடு தொடர்பு சாதனங்கள் பெரும் தவறினை இழைத்துள்ளன. ஏனெனில் அவை குரோத மனப்பான்மையையும், இனவாதத்தையும் இனங்களுக்கிடையே புகுத்தியுள்ளன. இரு பகுதி பத்திரிகைகளும் (சிங்களம், தமிழ்) இதற்கு துணை போய் உள்ளன. எனினும் தமிழ் மக்களும், சிங்கள மக்களும் தனிப்பட்ட முறையில் உறவாடுகிறார்கள். இதனை நான் மறுக்கவில்லை. ஆனால் இனம் என்ற ரீதியிலே முரண்பாடு நிறையவே காணப்படுகின்றது. இதனையே நாம் கவனத்தில் எடுக்க வேண்டும். என்னைப் பொறுத்தவரை ஒப்புரவு என்பது ஒரு இனம் மற்ற இனத்தை ஏற்கும் நிலைக்கு வருதலாகும். தமிழ் மக்கள் எல்லா உரிமைகளுடனும், சுதந்திரத்துடனும் வாழ வேண்டுமென்ற உணர்வு சிங்கள மக்களிடையே உருவாக வேண்டும். இப்படியான ஒப்புரவு நிலை ஏற்படவில்லை என்றால் அது சமாதானத்திற்கு சாதகமாக அமையமுடியாது. தற்போது தனிப்பட்ட முறையில் தமிழ்மக்கள் கொழும்பு போய் வருகின்றார்கள். சிங்கள மக்களும் தனிப்பட்ட முறையில் யாழ். வந்து போகிறார்கள். அவர்களுக்கிடையே குரோதங்கள் இருப்பதாக நாம் கூறமுடியாது. ஆனால் இனமாக வரும்போது ஒருவரை ஒருவர் ஏற்கமுடியாது உள்ளது. இனங்களுக்கிடையே புரிந்துணர்வை ஏற்படுத்த வேண்டும்.

அனைவரும் சகோதரர்களாக வாழ்வதற்கு ஒப்புரவு மிகவும் அவசியமானது. எனவே ஒப்புரவு என்பது முதலில் இனங்களுக்கிடையே ஏற்பட வேண்டும்.

கடந்த போரினால் இராணுவ வீரர்களும் அவர்கள் குடும்பங்களும் பாதிக்கப்பட்டுள்ளனர். குண்டு வெடிப்புக்களால் தென்பகுதியில் பல இடங்கள் தாக்கப்பட்டன. அதேபோல் இராணுவ நடவடிக்கை களினால் தமிழ் மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். எனவே இரு மக்களிடையேயும் ஒப்புரவை ஏற்படுத்த வேண்டும். இழப்புக்களை அதிகரிக்காது எதிர்கால சந்ததியை கருத்தில் கொண்டு செயற்பட வேண்டுமென்பதுதான் அனைவரின் விருப்பமும்.

குறிப்பாக பௌத்த மதத் தலைவர்கள் மட்டில் தமிழ் மக்களுக்கு பலத்த வெறுப்பு இருக்கிறது. அவர்களையும் மக்கள் மன்னித்து ஏற்கவேண்டும். அதேபோல் பௌத்த தலைவர்கள் புலிகள் மட்டில் தவறான எண்ணக் கருத்துகளுடன் இருக்கிறார்கள். அவர்களும் புலிகளைப் புரிந்து அவர்களை ஏற்றுக்கொள்ள வேண்டும். இம்மாற்றங்கள் நிச்சயம் சமாதானத்திற்கு வழிவகுக்கும்.

**3. சமூக நோக்குக் கொண்ட ஒரு பணியாளன் என்ற ரீதியில் நீதியுடனான சமாதானம் எம்மண்ணில் மலர மக்களின் பங்களிப்பு எவ்வாறு இருக்க வேண்டும் என நீங்கள் நோக்குகின்றீர்கள்?**

முதலாவதாக இனப்பிரச்சனைக்கு தீர்வு நீதியிலே கட்டப்பட்ட சமாதானமாக இருக்கவேண்டும். நீதி இல்லாமல் எந்த சமூகத்திலும் சமாதானம் மலரும் என நாம் சொல்லமுடியாது. கல்வி, பொருளாதாரம், மொழி என்பவற்றில் நீதிக்கு முதலிடம் கொடுக்கவில்லை என்றால் சமாதானம் நிலைபெறமாட்டாது. திருத்தந்தை 2ம் அருள் சின்னப்பர் அண்மையில் வெளியிட்ட திருமுகத்தில் சமாதனத்தின் தூண்களாக நீதியும் அன்பும் இருக்க வேண்டும் என்று கூறியிருக்கின்றார். ஆகவே சமாதானத்திற்கு அடிப்படையாக அமைவது நீதி என்பதை எம் மனதில் இருத்த வேண்டும். நீதி மக்களின் பங்களிப்பில் தங்கியுள்ளது. சகல வர்க்கத்தினரும், தலைவர்கள், கல்விமான்கள், தொழிலாளர்கள் என எல்லோரும் இதில் ஈடபட வேண்டும். மக்களின் பங்களிப்பின்றி சமாதானம் நிலை நிற்கமுடியாது. இதனை நாங்கள் தென் ஆபிரிக்காவில் நடந்த இனப்பாகுபாட்டின் முடிவிற்கு அனைவரும் உழைத்ததைக் காணலாம். முடிவுகளை மூவாயிரத் துக்கும் மேற்பட்ட மக்கள் சேர்ந்து எடுத்தார்கள்.

அரசு எவ்வளவு முயற்சி செய்தாலும் மக்களின் பங்களிப்பு இல்லாமல் சமாதானம் கிடைக்குமா? என்பது கேள்விக்குறிதான். சில நாடுகளில் போரில் ஈடுபட்டோர் மட்டும் பேச்சில் ஈடுபட்டதால் அது தோல்வியில் முடிந்தது. ஆனால் தென்ஆபிரிக்காவில் சாதாரண மக்களின் பங்களிப்பு இருந்ததால் பேச்சுக்கள் வெற்றி பெற்றன.

நீதியோடு கூடிய சமாதானம் என்பது எல்லோருக்கும் சமத்துவத்தை வழங்குவதோடு எல்லா மக்களின் பங்களிப்பும் இருந்தால்தான் அதனை நீதி என்று கூறலாம்.

**4. இனங்களுக்கிடையே கறைபடிந்த அனுபவங்களுடன் ஒப்புரவை மேற்கொள்ளல் சாத்தியமா? சாத்தியம் எனில் அது எவ்வாறு நிகழ வேண்டும்?**

இனங்களுக்கிடையே காழ்ப்புணர்வும், முற்சாப்பு எண்ணமும் உள்ளது. இது அகல வேண்டும். கசப்புணர்வுகளைக் களையாமல் சமாதானத்தை நாம் ஏற்படுத்தமுடியாது. பாதிக்கப்பட்டவர்கள் கசப்புணர்வை மறத்தல் சுலபமான விடயம் அல்ல என்பதை மனதில் கொள்ள வேண்டும். பழிக்குப்பழி எண்ணம் அகல வேண்டும். இது முடியாத காரியம் என்று கூறமுடியாது. இரு இனங்களுக்கிடையேயும் புரிந்துணர்வை ஏற்படுத்துவதால் கசப்புணர்வைத் தீர்த்துக் கொள்ளலாம். நிறுவனங்கள் ஊடாக வடக்கிலிருந்து தெற்கிற்கும், தெற்கிலிருந்து வடக்கிற்கும் சென்று பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவிகளை செய்யலாம். மன்னாரில் நடந்த சம்பவம் ஒன்று-ஒரு இறந்த இராணுவ வீரரின்தாய் அங்கு வந்து இரத்ததானம் செய்துள்ளார். நல்லெண்ண சமிக்ஞைகளாக இரு இனத்தவரும் ஒருவருக்கொருவர் நல்ல காரியங்களைச் செய்வதால் மனதில் உள்ள வடுக்கள் ஆறுவதற்கு உதவியாக இருக்கும். அதை விட்டுவிட்டு பழைய குரோதங்களால் பயன் எதுவுமில்லை. நடந்தவை நடந்துவிட்டன. இனிமேல் வரப்போவதில் கருத்தாய் இருத்தல் அவசியம். சிங்கள மக்கள் தமிழ் மக்களை, தமிழ் மக்கள் சிங்கள மக்களைப் புரிந்துகொள்ள வேண்டும். இதனால் கசப்புணர்வுகள் அகலும். பின் எம் நாட்டில் நிச்சயம் சமாதானம் ஏற்படும்.

**5. தமிழ் மக்களாகிய எமக்குள்ளும் ஒப்புரவு ஏற்படுத்த வேண்டி உள்ளதா? அது எவ்வகையில்?**

இனங்களுக்கிடையே மட்டுமல்லாது தமிழ் மக்களுக் கிடையேயும் ஆயுதக் குழுக்களுக்கிடையேயும் நிகழ்ந்த போரை வரலாறு மறக்கமுடியாது. இப்படியாக எமக்கிடையே குரோத மனப்பான்மையை வளர்த்துக் கொண்டு இன்னொருவருடன் சமாதானம் செய்வது

சாத்தியமல்ல. எமக்கிடையில் ஒப்புரவு என்பது அத்தியாவசியான தொன்றாகும். அது பல்வேறு மட்டங்களில் நிகழ வேண்டும்.

ஆயுதக் குழுக்களுக்கிடையே நடைபெற்ற போரின் குரோத மனப்பான்மை முதலில் நீக்கப்பட வேண்டும். அத்தோடு எம்மிடையே உள்ள மத குரோத மனப்பான்மையும் சாதி, பிரதேச குரோத மனப்பாண்மைகளும் நீங்கி எமக்கிடையில் சமாதானத்தை செய்து கொள்ளாது இன்னொரு இனத்துடன் சமாதானம் மேற்கொள்ள முடியுமா என்பது ஒரு பெரிய கேள்விக்குறியாகவே இருக்கும்.

எனவே எம்மத்தியில் பல்வேறு கட்டங்களில் ஒப்புரவு ஏற்படுத்தப்பட வேண்டும். எம்மிடையே பிரச்சினை இல்லையென மூடிமறைக்கமுடியாது. தற்போது எம்மிடையே பல குரோதங்கள் உறங்குநிலையில் உள்ளன. நாட்டில் சமாதானம் ஏற்பட்டால் எம்மிடையே உறங்கு நிலையிலுள்ள குரோதங்கள் புத்துயிர் பெற்று எழுந்து எமக்கிடையே போரையும் பலாத்காரத்தையும் ஏற்படுத்தலாம். ஆகவே முதலில் நம் மத்தியில் பல்வேறு அம்சங்களில் ஒப்புரவு ஏற்பட்டால்தான் நல்ல சமாதானம் எம்மண்ணில் உதயமாகும்.

**6. "நீதியும் ஒப்புரவும் எம் நாட்டின் அமைதிக்கு வழிவகுக்கும்" இது பற்றி உங்களது கருத்துக்களை பகிர்ந்த கொள்ள முடியுமா?**

நீதியில்லாமல் சமாதானம் இல்லை. இது அடிப்படைக் கோட்பாடாகும். இதனை திருச்சபை மட்டுமல்ல ஐக்கிய நாடுகள் சபையும் வலியுறுத்திக் கூறுகின்றது. நீதியுடன் கூடிய சமாதானம்தான் உண்மையான சமாதானம். ஆகவே, இது நிலைபெற வேண்டுமாயின் ஒப்புரவு இன்றியமையாததாகும்.

மனதில் குரோதத்தை வைத்துக்கொண்டு வெளியே சமாதானத்தை அதற்கான ஒப்பந்தங்களை செய்து கொள்ளுதல் முடியாததாகும். எனவே, நீதியும் ஒப்புரவும் சமாதானத்தின் இரண்டு தூண்கள் எனச் சொல்லலாம். இதனைத்தான் பாப்பரசர் பல (இடங்களில்) சந்தர்ப்பங்களில் குறிப்பிட்டிருக்கின்றார். எனவே தமிழ் மக்கள் தங்களுக்கிடையே அமைதியை, சமாதானத்தை ஏற்படுத்தவும் நீதியையும் ஒப்புரவையும் இரு பெரும் அம்சங்களாகக் கொள்ள வேண்டும்.

**பேட்டி கண்டவர்: அருட்.சகோ.அ.பி.திருமகன்**

# உளரீதியாக இடம்பெறும் ஒப்புரவு, சமாதானத்திற்கு வழிகோலும்

இன்று எம் பிரதேசத்தில் எம்மக்கள் போரினாலும், அதன் அனர்த்தங்களினாலும் பலவித இழப்புக்களையும் பாதிப்புக்களையும் அனுபவித்துக் கொண்டிருக்கின்றனர். போர் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டாலும் போரின் பின்தாக்கங்களிலிருந்து விடுதலையடைய/ குணம்பெற/சுயபெறுமதியுடன் வாழ உளவளத்துணை முக்கியமான தொன்றாக தேடப்படுகின்றது. உளவளத்துணை நம்மைப் பாதுகாக்கவும், உளச்சிக்கல்களிலிருந்து மீளவும், நாம் யார் என்று நம்மை அறியவும், நம்மை முழுமையாக ஏற்றுக் கொள்ளவும் நமக்கு வழிகாட்டுகிறது.

உளவளத்துணையானது இருவருக்கிடையில் உருவாகும் உறவாகும். இது துணைநின்று ஊக்குவிக்கும் உறவு. உதவியளிக்கும் உறவு. இந்த உறவின் விளைவாக துணைநாடி வந்தவர் தன் உண்மை நிலையை அறிந்து மிகவும் பயனுள்ள முறையில் தன் வாழ்க்கை சிக்கல்களுக்கு விடை காண்கின்றார். மேலும் துணைநாடி வந்தவர் தனது சுய அடையாளம் என்ன? எப்படிப்பட்ட மனிதனாக வளர வேண்டும் என்ற கேள்விகளுக்கு விடைகண்டு மகிழ்ச்சியான மனிதனாக வளர முயற்சி எடுக்கின்றார். அதனால் தன்னை முழுமையாக ஏற்று, பிறரோடு நல்ல உறவுகளை கட்டி எழுப்பி, தனது ஆற்றலை உணர்ந்து இழந்த தனது பெறுமதியை மீண்டும் உயர்வாகக் காண்கின்றார். இவ்வாறான ஒரு முழுமை வாழ்வை வாழச் செய்யும் கலைதான் உளவளத்துணையாகும். அதாவது உடல், உளம், ஆன்மா தங்களுக்குள் ஒன்றிணைவதால் அங்கு ஒப்புரவு தன்னோடும் பிறரோடும் உலகோடும் இடம் பெறுகின்றது.

இவ்வாறு துணைநாடி தன் நிறைவாழ்வு நோக்கிய பயணத்தை நலமாகக் கடக்க தேவைப்படும் இரு கால்கள்.

1) மகிழ்ச்சியான சுய ஏற்றுக் கொள்ளல் -தன்னுடைய தனித்துவத்தைப் பாராட்டல்
2) தன் பயணத்தில் தானெடுக்கும் ஒவ்வொரு முயற்சிக்கும் சரியோ, தவறோ, முழுப்பொறுப்பையும் ஏற்றுக் கொள்ள தயாராய் இருத்தல்.

துணைநாடி, அகவிடுதலை பெறும்போது தன்னைத் தானே மன்னித்து, ஏற்க உதவுவது அவனுக்குள் உறையும் அந்தத் தெய்வீக அன்பென்னும் கொடையே. எனவே துணைநாடி மன்னிப்பை அன்பென்னும் கொடையாக பெறுகின்றான்/ள். இந்த அன்பு என்னும் கொடையே அவன்/அவளுக்கு மற்றவர்களை முழுமையாக அன்பு செய்ய, மன்னிக்க உதவுகின்றது. அத்துடன் உளவளத்துணையினால் அகவிடுதலை/ தன்னுடன் ஒப்புரவு ஆனவன்/ள், தன் வாழ்விற்கு முழுப்பொறுப்புணர்வு உள்ளவனாக/ளாக இருப்பான்/ள். அடுத்தவர் செயலுக்கு எதிர்வினையாற்றுபவன்/ள் அதாவது வாழ்வின் தூண்டுதலுக்குள்ளும், சூழ்நிலைகளுக்கும் தான்தரும் பதில்களையும், செயல்களையும் தீர்மானிக்கக்கூடிய ஏதோ ஒன்று தனக்குள் இருக்கிறது என்பதேயாகும். அதற்கு முழுப்பொறுப்பையும் தான் ஏற்றுக் கொள்கிறான்/ள். தன்னுள் இருக்கும் அந்த "ஏதோ ஒன்றினால்" தான் செய்வதையே செய்கிறேன், தான் சொல்வதையே சொல்கிறேன், என்று முடிவு செய்கிறான். மற்ற நபர்களும், மற்ற சூழ்நிலைகளும் ஒரு குறிப்பிட்ட சூழலுக்கு ஒரு தனிப்பட்ட விதமான பதிலை அவனை/அவளை தரும்படி தூண்டலாம். ஆனால் அந்தப் பதிலின் தன்மையை நிர்ணயிப்பது அவனு/ளுக்குள் இருக்கும் இந்த "ஏதோ ஒன்றுதான்". அதாவது நானே வினையாற்றுபவன்/ள் அடுத்தவர் செயலுக்கு எதிர்வினையாற்றுபவன்/ள் அல்ல என்று உணர்கின்றாள். உளவளத்துணை இதனை வாழ்க்கை யில் அடைய உதவுகின்றது. எனவே தானே ஒரு செயலை சுதந்திரமாய் தெரிவு செய்யும்போது அது அன்பின் மன்னிப்பின் செயலாக மாற்ற முழுப் பொறுப்பு ஏற்கிறான்/ள். இது சமாதானத்திற்கு வழிகோலுவதாகும்.

தன் வாழ்விற்கு முழுப்பொறுப்பு ஏற்பவன் தன் உறவுநிலையில் முதிர் மனப்பாங்கு (Adult Ego State) நிலையிலிருந்து செயற்படும்போது மற்றவரை, சுதந்திரமாய், அறிவுபூர்வமாய் மன்னிக்கவும், மன்னிப்பு கேட்கவும் முடியும். இந்த எனக்குள் இருக்கும் "ஏதோ ஒன்றினாற்" தான் நான் வழிநடத்தப்படுகிறேன். இதுவும் என் பொறுப்புத்தான். அவ்வுரிமையை நான் யாருக்கும் விடுவதில்லை. எனவே உளவளத்துணை பெறும் துணைநாடி "முதிர்மனநிலையில்" (நாம் நமக்காக முடிவெடுக்கவும் தேர்வு செய்யவும் உதவும் நம்மனம்) உறவு கொள்ள தன்னை பயிற்றுவிப்பதனால் அவன் தன்னோடும், அயலவரோடும், ஏன் பகைவரோடு முதலாய் நல்லுறவு கொள்ள, அன்பு செய்ய, மன்னிக்க பொறுப்பெடுக்கின்றான். இதனால் அவனுள்ளும், வெளியேயும் அமைதி/சமாதானம் பரவுகின்றது.

எமது நிலையத்தில் பணிபுரியும், உளவளத்துணையாளர் ஒருவரின் ஒரு கால் போரின் அனர்த்தங்களினால் பாதிப்புக்குள்ளாகியது. இதற்காக அவர் வவுனியா, அனுராதபுரம் வைத்தியசாலைகளுக்கு மாறிமாறி மாதம் தோறும் அனுப்பப்பட்டார். உளவளத்துணையினால் காலின் இழப்பிற்காக வருந்தி விடுபட்டதினால் தன்னை முழுமையாக ஏற்றுக் கொண்டார். வவுனியா, அனுராதபுர வைத்தியசாலையில் இருந்த வேளை அவரின் சுதந்திரமான தெரிவானது அங்கிருந்த சிங்கள சகோதரரை மன்னிக்க, ஏற்றுக்கொள்ள அவர்களுடன் உறவுகொள்ள அவருக்கு வல்லமையை அளித்தது. தன் உள்ளம் அன்பால் நிறைந்ததினாற்தான் அவர்களை மன்னித்து, உறவாட, உதவிசெய்ய முடிந்தது என்று கூறினார். இதனால் அங்கிருந்த நாட்கள் "சுமையாக" அமையப் போகின்றதே என்று பயந்தவருக்கு தன் செயலுக்கு தானே பொறுப்பெடுத்ததினால் அந்நாட்கள் இலகுவான, மகிழ்வான நாட்களாக கடந்ததை தான் உணர்ந்ததாக கூறினார். அத்தடன்தான் தங்கிய (Ward) "வாட்டில்" தன்னிலிருந்து புறப்பட்ட மன்னிப்பு, நட்பாய், புரிந்துணர்வாய், வல்லமையாய் உருமாற்றம் பெற்றதை தான் உணர்ந்ததாக தன் அனுபவத்தை பகிர்ந்து கொண்டார். தன் காலிற்கு சத்திர சிகிச்சை பெற என்று சென்றவர், சத்திர சிகிச்சையில்லாமலே குணம் பெற்றுத் திரும்பினார்.

இங்கு மன்னிப்பே வல்லமை (Forgiveness is Power). இது எங்களை பழைய கசப்பிலிருந்து விடுவிக்கின்றது. ஒவ்வொரு தீய செயலையும் எதிர்கொள்கின்றது. இவ்வல்லமையானது மன்னிப்பு கொடுப்பவரையும் மன்னிப்பு பெறுபவரையும் குணமாக்குகின்றது. எம்மினூடாக இம்மன்னிப்பை எவ்வித தடையுமின்றி பாய்ந்தோட விடுவோமாயின் அது இலங்கையை மாத்திரமல்ல, உலகையே உருமாற்றும். எனவே எங்கள் கையிற்தான் மன்னிப்பின் திறவுகோல்கள் உண்டு. அதனை நாளாந்தம் தெரிவு செய்யும் பொறுப்பை ஏற்க உளரீதியாக ஒப்புரவு பெற்றவனால் முடியும் என்பது என் நம்பிக்கை. எனவே மன்னிக்கும் வல்லமை வெளியிலிருக்கும் ஒன்றல்ல. மாறாக எம் அகத்தினுள் உள்ளதொன்றே. எனவே மன்னிக்கும் செயலானது அதிகளவு வல்லமையை தன்னுள் கொண்டுள்ளது. மன்னிப்பதாவது எங்களை பலவீனப்படுத்தியோ, புண்படுத்தும் நிலையிலோ விட்டுவிடுவதல்ல, மாறாக எம் வாழ்வையும், பணியையும் வல்லமையுடையதாக உருமாற்றுகிறது. மிகக் கடினமான சந்தர்ப்பங்கள் என்று நாம் நினைக்கும் நிகழ்வுகளுக்குள் முதலாய் 'மன்னிப்பு' எம்மை இட்டுச் செல்கிறது. இதயத்தின் அமைதியை/சமாதானத்தை அனுபவிக்கச் செய்கின்றது.. இதற்கு மேலாக உளவளத்துணையால் நம்முள் பெற்ற ஒப்புரவானது நம்மிடையே ஓர் நேர் நிறை சங்கிலித் தொடர்பொன்றை இயக்க வைத்து அது சமாதானம் என்னும் கனியை தோற்றுவிக்கின்றது.

சகோ. கிறிஸ்ரோபெல்

# புனித பசில்
(329 - 379)

## இவர் யார்?

புனித பசில் செசரியாவில் பிறந்தவர். அறிவு ஆன்மீகம் சார்ந்த குடும்பப் பின்னணியிலே வளர்க்கப்பட்டவர். சிறந்த மதிநுட்பம் வாய்ந்தவரும் சொல்வன்மைமிக்க ஆசானுமாவார். பத்து சகோதர சகோதரிகளைக் கொண்ட குடும்பத்தில் இவரே மூத்தவர். இவர் தனது தந்தையின் வழிநடத்ததுதலில் பற்பல இடங்களில் கல்வி கற்று, பற்பல இடங்களில் கல்வி கற்பித்துமிருக்கின்றார். இவருடைய சகோதரி மக்கரினா தூய்மையான வாழ்வு வாழ்ந்தவர். சகோதரியினுடைய தூண்டுதலால் இவர் உலக வாழ்வின் நிலையாமையை புரிந்துகொண்டு திருமுழுக்குப் பெற்று மடத்துறவு (Monasticism) வாழ்வுக்குள் தன்னை உட்புகுத்திக் கொண்டார். இவர் கீழைத்தேய மடத்துறவு வாழ்வின் தந்தை என்று அழைக்கப்படுகிறார். இவரது சட்ட திட்டங்கள் இன்றும் சில கீழைத்தேய திருச்சபைகளில் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. சிறிது காலத்திற்குப் பின் புனித பசில் மடத்துறவு வாழ்விலிருந்து குருவாக திருநிலைப்படுத்தப்பட்டு செசரியா மறைமாவட்டத்தில் ஆயர் எயுசேவின் கீழ் பணிக்களம் புகுந்தார். பின் இவரே அம்மாறை மாவட்டத்தின் ஆயராக பணிபுரிந்தார்.

## இவரது பணிகள்

### ☀ சமூக சேவையாளர்

சமூக சேவையின் தாற்பரியத்தை தனது எழுத்துக்களாலும், தன்னுடைய சேவையாலும் உலகுக்கு காட்டினார். மக்களுக்கெதிராக அளவுக்கதிகமாக வரி அறவிடப்படுவதை எதிர்த்து நின்றார். கடவுள் முன்னிலையில் மனிதர்கள் அனைவரும் சமமானவர்கள் என்றும் உலக நுகர்வுப் பொருட்கள் ஒரு சிலரை சென்றடையும் அநீதியை எதிர்த்து சமஉரிமை பற்றிப் பேசினார்.

நகரொன்றைக் கட்டி அங்கு முதியோர் இல்லம், வைத்தியசாலை, இன்னும் வேலையாட்கள் தங்குவதற்கு தங்குமட வசதிகள் செய்து கொடுத்து சேவை புரிந்தார்.

### ☀ திருவழிபாட்டியல் வல்லுனர் (Liturgist)


திருவழிபாடுகளில் புது விடயங்களை அறிமுகப்படுத்தினார். சிறப்பாக மடத்துறவிகளின் திருப்புகழ் மாலையில் பல மாற்றங்களைக் கொண்டு வந்தார். கீழைத்தேய திருச்சபைகளில் இவரது முத்திரை ஆழமாக பதிக்கப்பட்டிருக்கின்றது.

**※ திருச்சபையின் கோட்பாட்டு வளர்ச்சிக்கு ஆற்றிய பங்களிப்பு**

இவர் ஆரியனிச பேதகத்தை பின்பற்றிய பேரரசன் வலன்சுக்கு எதிராக நிசேயா சங்கம் எடுத்த விசுவாசப் பிரமாண தீர்மானத்துக்கு ஆதரவாக நின்றார். எல்லாம் வல்ல தந்தை ஒருவரே கடவுள் என்றும், மகன் அவரது படைப்பு, தந்தைக்கு கீழ்ப்பட்டவர் என்று கூறும் பேதகத்தை எதிர்த்து தந்தை, மகன், பரிசுத்த ஆவி மூவரும் சமமான மகிமையைப் பெறுகிறார்கள் என்னும் கருத்தை திட்டவட்டமாக வலியுறுத்தினார்.

ஏறக்குறைய 400 மடல்கள் இவரது இறையியல் கோட்பாட்டை திட்டவட்டமாக விளக்குகின்றன. பரிசுத்த ஆவி பற்றி இவர் எழுதிய நூல்களும் பிரபல்யம் பெற்றவை. திருச்சபையில் சிறந்த மறைவல்லுனருள் ஒருவராக ஏற்றுக் கொள்ளப்பட்டார்.

**சகோ. விமல் அமதி**



**SYNOPSIS**

## Understanding and reconciliation will lay the foundation for peace among the races.

It is a well known fact that every race has its own peculiar characteristics. In a multi-racial society these differences give rise to polarisation especially when freedom and equality are challenged. As a result history is full of examples of blood shed and devastation. In order to escape the sanctians of the world those in power put up a front like "war for peace". This is a contradiction in terms. Even America's war against terrorism has brought dreadful destructions and instead of achieving peace has earned for itself the hatred of the nations. To bring about peace the dominant party must be prepared to give up its chauvinism, indiscriminate wielding of authority and power and grant the fundamental rights magnanimously to the grieved party. The latter must overcome its hurtful feelings not by revenge but through forgiveness and reconciliation.

Mere peace overtures like multi-religious pilgrimages, rituals and plays will not bring about this understanding. Something more substantial is needed. The denied basic rights must be reexamined with due respect and only a just and equitable solution to these will bring about the fruits of peace.

Fr. S.A. Arudchelvan

## RECONCILIATION : WHITER THAN SNOW

The contemporary spiritual leaders and the intellectuals stress reconciliation as the fundamental slogan to build up a society with values of unity, peace and love. What is reconciliation in the Christian sense? It is a complex biblical term which includes God's invitation and our response by an ongoing conversion within a community of faith. It is a generous gift of God for our salvation.

Reconciliation reflects the pastoral practice and the theological understanding of the sacrament of initiation in each historial period. The sacrament of Reconciliation is seen as something of a second Baptism for the remission of post baptismal sin. The second Vatican Council says, "By the sacrament of penance sinners are reconciled to God and the church" (P.O.5).

Christ by his Death and Resurrection brings about reconciliation. God's attitude is to hate sin, but not the sinner.

We must not think that it is the sinner, who through his own independent journey of conversion, earns mercy. On the contrary, it is God's mercy that impels him to journey along the path of conversion. Before man initiates his journey to God, it is God who takes initiative to come to the persons' home.

It is the urgent need of the time that the church must manifest herself as a community of reconciliation by the ways of making present the healing power of God in the world.

**Bro. S. Douglas Milton Logu**

## Working for justice, peace and human development is an integral part of evangelization

Evangelization covers the whole gamut of human life. The evangelizer has to walk along the footsteps of Jesus Christ and proclaim the good news to the poor and the marginalized. Man in born with a body of flesh and bone etc. and is a social being. Hence it is not enough to give him the dogmatic truths only. He has to be liberated from the earthly bondages.

In the light of the Sacred Scripture the nature of his mission is clear as found in LK. 4:8; Mt. 10:1-10, etc. The disciples were sent to preach the good tidings to the poor, to liberate the eaptives etc. Jesus Christ came to give freedom to the whole man. The Epistles in NT are more down to earth than the Gospels.

In the History of the Church it can be observed right from the beginning that the Church leaders had been the spokesmen for the downtrodden. eg. Sts. Ambrose and Basil in the 4th C. In the modern times with Pope Leo XIII in the 19th C. and then in the Vat.11 and afterwards the Church had been in the forefront to fight for the rights of the afflicted in some way or other.

In the local Church in Jaffna also adequate efforts are taken. The Diocesan Human Development Center which was founded in 1972 remains very active- Yet more and more people should dedicate themselves wholeheartedly to work for this multidimensional evangelization.

**Bro.A.Soosainathan**

# Importance of reconciliation in the peace process being effected by political changes

In the war-town country of ours we have come across a number of peace-pacts. The present peace-pact in force between the Sri Lankan government and the LTTE does not mean that there is a permanent peace as we are already encountering some stumbling blocks. The mission of John the Baptist given in Lk 3:4-6 gives the tone and the hope for the desired peace.

A number of international bodies and most of the Sri Lankans in the North and the South are supporting the peace moves. Yet the fluctuating stands taken by the president herself, a section of the Buddihist clerly and the few racist minded sinhala parties do not in any way support these peace moves.

The prime minister Hon. Ranil Wickramasinghe has the support of 80% of the people for his peace-moves and the LTTE which was for 18 years involved in a fierce war with the government are now earnest about the peace process. In spite of the positive developments there are still some hurdles such as the protracted delay in vacating the schools, churches and temples as stipulated in the MOU (memorandum of understanding), unnecessary road-block sand sentry points, excessive taxation etc. Still the relationship between the people and the security forces, between the local people and the Moslems and Sinhalese who are beginning to come back to Jaffna is not genuinely cordial enough.

A sincere reconciliation should take peace to build up cordiality. All the people must make a sincere effort to understand the difficulties of each other and they should not harbor any hate-feelings based on the past bitter events. All sections of the people should give their contribution to bring about a sincere reconciliation to form a healthy community.

**Miss.M.Pathma**

# The role of the youth in the journey towards justice, reconciliation and peace

Justice, reconciliation and peace are all interconnected and these are the pillars on which a country with stable structures can be built. In spite of the scientific and technological advances, there are also elements of despair. In the developing countries especially all types of outbreaks of violence sow seeds of distructoin. Lack of respect for human dignity, poor maintenance of justice, refusal to accept one another, disregard for the rights of others etc. are the basic reasons for this sorry situation. The responsibility of repairing this falls on the youth as the future leaders of the society.

The youth who can do a lot to transform the society are now allowing them selves to be influenced by the unhealthy surroundings forgetting the norm in the Book of proverbs 1/7a. "The fear of god is the beginning of wisdom."The sacred scriptures underline peace, justice and the struggle to bring these about [James 3:18; Mt. 5:9-10] Special references are made to the forgiveness of the enemy (Mt. 5:43-44) Basing on these the teaching of the Church found in 'Pacem in Terris' of Pope John XXIII and the Vat.II documents are clear.

The plan of god to bring about peace in the world is clearly articulated. Peace should be built on justice. Peace is born out of love. On many occasions when human rights are denied the youth turn militant and have recourse and armed struggle. It is true that the youth in future architects of the society have a duty to fight for justice and peace. Christ Himself says that he came to fulfill this mission (Lk. 4:16-21). Hence the youth in their fight for justice and peace deep always the earthly life of Jesus Christ as their role model.

**Mr.M.Jesuthasan**

# An Interview with Rev.Fr.C.G. Jeyakumar

In the background of peace-moves and the forthcoming peace-talks after a long-drawn war between the Sri Lankan government and the LTTE, the need for reconciliation for a lasting peace is felt. In this connection Rev.Fr. C.G. Jeyakumar, the director for HUDEC (Human Development Center) for the diocese of Jaffna gives his views.

He emphasizes two points viz the need for a political solution to the ethnic problem and the need for reconciliations between Tamils and the Sinhalese. Relevant scriptural background for the need for reconciliation is given. Ignorance and misguided attitudes should be done away with.

Acceptance of each other not merely as individuals but as ethnic bodies as equals to bring about this reconciliation is stressed . Certain areas of distrust as what the Tamils have with regard to the Buddhist clergy, as what the Buddhist clergy have with regard to the LTTE. etc. must be removed.

Functioning also as a social worker he sees the indispensability of justice to bring about peace. The present Holy Father also stresses this aspect. Citing the South African experience he says that the participation of the masses is essential for the success of this process. Feelings of hatred etc. must be considered as of the past and as new beginning should be made for a peaceful future.

He also does not fail to indicate that there are many areas among the Tamils themselves which call for reconciliation as between armed groups, castes, regions etc.

He concludes reasserting together with the Church as well as the U.N. that justice and reconciliation are the two pillers of peace.

**Interviewed by Bro.A.P. Thirumahan**

# Reconciliation within one's own mind leads to peace

In war in Sri Lanka though over for the time being has still its effects on the people who need to come out of these, get healed and to live with self-dignity. Counselling is a help to achieve these. This helps one to be reconciled with himself and hence with the others as well as the rest of the world. For this a healthy acceptance of one's own self as he is and owning up responsibility for all his actions whether these be right or wrong are essential.

A mature person can forgive himself to be able to forgive others. For this one has to be fully aware of the power within himself which enables him to act in a particular way and he can make his actions as those of love and forgiveness. He can then freely forgive those who harm him and ask for forgiveness. Then there will be peace within himself and it is radiated outside.

An example from real life is given to show that forgiveness is power and sign of strength and not weakness. It heals the one n who gives it as well as the one who receives it. This forgiveness has the transforming power to bring about peace.

**Sr. Christabel**

# குறுக்கெழுத்துப் போட்டி – இல.7 முடிவுகள்

## விடைகள்

**இடமிருந்து வலம்**

1. குணமாக்கல்
5. புனிதம்
6. புவி
7. வசனம்
9. பகை உணர்வு
10. திருப்பாடல்

**மேலிருந்து கீழ்**

1. குழு
2. மாறாதவர்
3. உடம்புகள்
4. கல்வி
5. புறா
8. சவுல்
9. தி.ப

## சரியான விடைகள் எழுதி பரிசுபெறும் அதிஷ்டசாலிகள்

**1ம் பரிசு :** தீத்துஸ் றேணுகா
சென். ஜேம்ஸ் மகாவித்தியாலய வீதி,
குருநகர், யாழ்ப்பாணம்.

**2ம் பரிசு :** A.M. மஞ்சுரிக்கா
'பிறேமஸ்ரன்'
நெல்லியடி, கரவெட்டி.

**3ம் பரிசு :** செ. மரிய பஜினோ றியோ
c/o S. செல்வராஜா
சென். ஜேம்ஸ் வீதி, இளவாலை.

## பாராட்டுப் பெறுவோர்

எ. ஜக்குவின் நந்தா, அச்சுவேலி; ஸ். பஸ்ரி ரஜித், யாழ்ப்பாணம்; என். அஜந்தா, அச்சுவேலி; பி. டொலிஜின், அல்வாய்; க. மேரி அருள்மதி, உடுவில்; எம். றொன்சியா, அச்சுவேலி; ஆ. பிறேமா, கரவெட்டி; எம். நிலோஜனா, பருத்தித்துறை; ஞா.மரியகிருதாஸ், வவுனியா.

# குறுக்கெழுத்துப் போட்டி – இல.8

## இடமிருந்து வலம்

1. இறைவா உமக்குப் புகழ் (5)

3. அறநெறியின் அதிகாரத்தில் நம்பிக்கை கொண்டு அதை இறுக்கமாக பின்பற்றுவதால் விடிவுகிட்டும் என்று நம்புகிறவர்கள் (5)

(வலமிருந்து இடமாயுள்ளது)

7. லூக். 9:22-24 ன்படி துறக்க வேண்டியது. (5)

8. ஆதிக்கிறிஸ்தவர்கள் இதில் வளர்ந்தார்கள் (4) (குழம்பியுள்ளது)

9. இது சார்ந்தவைகளுக்கு, ஒரு வகையான விளக்கமும் மண்ணைச் சார்ந்தவைகளுக்கு இன்னொரு வகையான உருவமும் உண்டு.(5) (குழம்பியுள்ளது)

## மேலிருந்து கீழ்

1. கிறிஸ்துவின் உயிர்ப்பில் இது பெறும் மறுவாழ்வு (5)


2. உயிர்ப்பின் மானிட விடுதலையின் கால்கோள் என்ற கட்டுரையை எழுதிய அருட்தந்தை (6)

4. இவ்விதழின் இறையியலாளரை அறிமுகப்படுத்தியவர் (4) (குழம்பியுள்ளது)

5. நகரம் (5) (குழம்பியுள்ளது)

6. கிறிஸ்துவின் உயிர்ப்பை நிரூபிக்க சிலர் வெறுமையான இதை எடுத்துக்காட்டுகின்றார்கள் (4) (தலைகீழாயுள்ளது)

# குறுக்கெழுத்துப் போட்டி – இல.8




**அனுப்புபவரின் பெயர்** : ..................................................................

**விலாசம்** : ..................................................................

..................................................................

..................................................................

- விடைகள் மார்ச் 2002 இதழில் உள்ளன.
- விடை எத்தனை எழுத்துக்களால் ஆனது என்பதை அடைப்புக்குறிக்குள் உள்ள எண் குறிக்கும்.
- மேலுள்ள கூப்பனை மட்டுமே பயன்படுத்த வேண்டும்.
- விடைகள் வந்து சேர வேண்டிய இறுதிநாள் ஒக்டோபர் 15, 2002

முகவரி : **குறுக்கெழுத்துப்போட்டி – இல. 8**
**இறையியல் கோலங்கள்**
**புனித சவேரியார் குருத்துவக் கல்லூரி**
**கொழும்புத்துறை, யாழ்ப்பாணம்.**

# இறையியல் கோலங்கள்


தமிழ் இறையியல் காலாண்டு இதழ்
ஆண்டு சந்தா (அஞ்சல் செலவு உட்பட) ரூபா 80/=
தனிப் பிரதி 25/=

தொடர்புகொள்க :-
''இறையியல் கோலங்கள்''
புனித சவேரியார் குருத்துவக் கல்லூரி
கொழும்புத்துறை
யாழ்ப்பாணம்.

தொலைபேசி 021-2482


# IRAI IYAL KOLANGAL


*A Tamil Theological Quarterly*
*Annual subscription (Including Postage within Sri Lanka) Rs. 80/=*
*Single Copy 25/=*

*Subscription and Correspondence to :*

*Irai Iyal Kolangal*
*St. Francis Xavier's Seminary,*
*Columbuthurai,*
*Jaffna,*
*Sri Lanka.*

*Tel.No. 021-2482*

புனிதவளன் கத்தோலிக்க அச்சகம், யாழ்ப்பாணம், இலங்கை 2002, தொலைபேசி :-021-2378